விலை ரூபா: 7.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பதின்னான்கு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2035 | மார்கழி 28 | புதன்கிழமை (12.01.2005) | தொலைபேசி 2223378, 2227644 | ஒலி 24

ரா
ம்
கோ
சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# இந்தியத் தூதுவர் நிருபமராவ் வடமராட்சிக்கு இரகசிய விஜயம்

## ஹெலியில் சுற்றி அழிவுகளை பார்வையிட்டார்

(நமது நிருபர்)

**இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபமராவ் நேற்று இரகசிய விஜயம் ஒன்றை மேற்கொண்டு வடமராட்சிக்கு வந்தார்.**

**அங்கு வந்த அவர் சுனாமியினால் பாதிக்கப்பட்ட வடமராட்சிப் பிரதேசத்தை இராணுவக் ஹெலிகொப்டரில் சுற்றிப் பார்வையிட்டார்.**

கொழும்பிலிருந்து நேற்றுக் காலை விமானம் மூலம் பலாலி வந்த அவர் அங்கு இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்தித்து சுனாமி பேரலையால் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்தும் தேவைப்படும் உதவிகள் குறித்தும் கேட்டறிந்து கொண்டார்.

பின்னர் இராணுவக் ஹெலிகொப்டரில் பருத்தித்துறை இராணுவ முகாமுக்குச்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தை சேர்ந்த இளைஞன் மட்டக்களப்பில் கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் மட்டக்களப்பில் இனந்தெரியாதோரால் வானுடன் கடத்திச் செல்லப்பட்டுள்ளார் என அவரது மாமியார் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, சுன்னாகத்தைச் சேர்ந்த கந்தையா பகீரதன் (வயது 23) மற்றும் அவரது நண்பர் உதயகுமார் ஆகிய இருவரும் வெள்ளவத்தையில் வசித்து வந்தனர்.

இவர்கள் 59-8837 இலக்கமுடைய ஹயேஸ் வானில் அவரது நண்பர் உதயகுமார் என்பவருடன் கடந்த 28 ஆம் திகதி பயணிகளை மட்டக்களப்புக்கு ஏற்றிச் சென்றார், அங்கு அவர்களை இறக்கிவிட்டு திரும்பிவரும் வேளையில் அவர்கள் இருவரும் வானுடன் கடத்தப்பட்டுள்ளார்கள் என அவரது மாமியார் சரோஜா கடந்த 8 ஆம் திகதி மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

(14 ஆம் பக்கம் பாரக்க)

# அரசின் அண்மைக்கால செயற்பாடுகள் சமாதான நம்பிக்கையை சிதறடித்துள்ளது

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

எம் மீது வலிந்து யுத்தம் ஒன்று மீண்டும் திணிக்கப்பட்டால் அதனை எதிர்கொள்ளவேண்டிய கடப்பாட்டில் நாம் உள்ளோம் என விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தீவில் மீண்டும் யுத்தம் வருமா என்பது குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஊடகம் ஒன்று கருத்துத் தெரிவிக்கையில் இதனைக் கூறினார்.

எங்களைப் பொறுத்தவரை ஆழிப்பேரலைக்கு முன்னால் பேச்சுவார்த்தைகள், சமாதான முயற்சிகள் எல்லாம் இறுக்கம் அடைந்த ஒரு நெருக்கடியான நிலை காணப்பட்டது.

அரசாங்கம் சமாதான முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுப்பதற்கு ஆக்கபூர்வமான முன்னெடுப்புக்களை மேற்கொள்ளாது தங்களுடைய அரசியல் அதிகாரத்தை பேணுகின்ற அதிகார போட்டிகளில் மட்டுமே கவனம் செலுத்தி வந்தது.

ஆழிப்பேரலை எல்லா இன மக்கள் மத்தியிலும் ஏற்படுத்திய பாதிப்பைப் பயன்படுத்தி, மனிதாபிமான கண்ணோட்டத்துடன் தமிழ்மக்களையும் புலிகளையும் பார்த்து அவர்களுடன் இணைந்து மனிதாபிமானப் பணிகளை அரசு முன்னெடுக்கும் என்ற எதிர்பார்ப்பு சகல மட்டத்திலும் இருந்தது.

ஆரம்பத்தில் அதற்கான அறிகுறிகள் தென்பட்டன. ஆனால், எவ்வித நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படாத இடத்து குறிப்பாக சர்வதேச சமூகத்தின் உதவிகளை தெற்கிற்கு வழங்குகின்ற அளவை பாதிக்கப்பட்ட மக்கள் என்ற வகையில் வடக்கு கிழக்கு பகுதிக்கு அதை பகிர்ந்தளிக்கும்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## கலவாய் மீனுக்குள் கைவிரல்கள் மீட்பு

(புங்குடுதீவு)

புங்குடுதீவில் சமைப்பதற்காக வாங்கிய மீனுக்குள் இருந்து இரண்டு கைவிரல்கள் மீட்கப்பட்டுள்ளன.

நாலாம் வட்டாரத்திலுள்ள மீன்சந்தையில் கொள்வனவு செய்யப்பட்ட கலவாய் மீனுக்குள் இருந்தே கைவிரல்கள் மீட்கப்பட்டன. அதே இடத்தைச் சேர்ந்த இ.முத்துராசா என்பவரினால் கொள்வனவு செய்யப்பட்ட மீனை வெட்டியபோது கைவிரல் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-126)

# சுனாமி இழப்பு நிவாரண நடவடிக்கைக்கு அரசுடன் இணைந்து செயற்பட ஐ.தே.க. முடிவு

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சுனாமி கடல் அலையால் ஏற்பட்ட அழிவுகளிலிருந்து நாட்டை மீட்டெடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமியால் ஏற்பட்ட இழப்புக்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்கி நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவது என தமது கட்சியின் நிறைவேற்றுக் குழு தீர்மானத்தை எடுத்துள்ளதாக ரணில் கூறினார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட எமது நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப பெருமளவான உதவிகள் தொடர்ந்து வந்த வண்ணம் உள்ளன. அதற்கு அந் நாடுகளின் பெரும் தன்மையே காரணம் ஆகும். வெளிநாட்டு உதவிகளைப் பெற்று உதவிகளை மேற்கொள்ள அரசாங்கம் எமது ஒத்துழைப்பினை எதிர்பார்க்காவிட்டாலும் நாங்கள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் நேற்றிரவு கோஷ்டி மோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் நேற்றிரவு இருகுழுக்களிடையே இடம்பெற்ற கோஷ்டி மோதலில் இரண்டு ஆட்டோக்கள் அடித்துநொருக்கப்பட்டதுடன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, முகமாலையிலிருந்து யாழ்.நோக்கி வந்த தனியார் பஸ் ஒன்றில் பயணித்த இரண்டு யுவதிகள் மீது அதில் பயணம் செய்த சில இளைஞர்கள் அங்கசேஷ்டை புரிந்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து குறிப்பிட்ட யுவதிகள்

(14 ஆம் பக்கம் பார்க்க)

# பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைக்க 15 ஆயிரம் பில்.அமெ. டொலர் தேவை

## உதவி வழங்கும் நாடுகளுக்கு அரசு அறிவிப்பு

(கொழும்பு)

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள மீள் குடியேற்றப் பணிகளுக்கு தேவைப்படும் நிதி தொடர்பான அறிக்கை ஒன்றை அரசாங்கம் உதவி வழங்கும் நாடுகளுக்கு நேற்று அனுப்பிவைத்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்புவதற்கு 15 ஆயிரத்து 600 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி தேவைப்படுவதாக அந்த அறிக்கையில் அரசு சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய திட்டமிடல் திணைக்களம் மற்றும் நிதி திட்டமிடல் அமைச்சு ஆகியன கூட்டாக இணைந்து இவ் அறிக்கையினை தயாரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட பகுதியில் வீடுகளை அமைப்பதற்கும் நிர்மாணப் பணிகளுக்கும் 400 மில்லியன் டொலர் தேவைப்படும் எனவும் அந்த குழுக்கள் மதிப்பிட்டுள்ளன.

அரசாங்கம் 12 பெரிய நகரங்களையும் 20 மத்திய மற்றும் 30 சிறிய நகரங்களையும் அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-04)

# உண்மை நிலையை அறிந்துவிடுவார் என்ற பீதியிலேயே அனானின் வடக்கிற்கான விஜயத்தை அரசு தடைசெய்தது

## யாழ்.மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றியம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

**ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனான் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்ட வடபகுதியையும் பெரும் இழப்புக்களை சந்தித்த எம் மக்களையும் சந்தித்து அவர்களது அபிலாஷைகளை நேரடியாக கேட்டறிய பெரும் ஆவல் கொண்டிருந்த போதும் அதற்கான அனுமதியை மறுத்தன் மூலம் இலங்கை அரசாங்கம் தன்து பேரினவாத இன ஒடுக்குமுறையை வெளிப்படையாக வெளிக்காட்டியுள்ளது.**

இவ்வாறு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனானின் வடபகுதிக்கான விஜயத்தை அரசு தடுத்தமை மற்றும் நிவாரணப் பணிகளில் தமிழர் தாயக பகுதிகளைப் புறக்கணிக்கின்றமை தொடர்பாக தம் கண்டனத்தை வெளிப்படுத்தி யாழ். மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியத்தினரால் மாகாண ஆளுநரிடம் ஒப்படைக்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சொல்லளவில் பாரபட்சமற்ற முறையில் சகலதுறைகளிலும் செயற்படுவதாகக் காட்டிக் கொள்ளும் போது செயலில் அதற்கு எதிர்மாறான நிலை கொடுப்பதும் கடந்த நீண்டகால சிங்கள பேரினவாதத்தின் இரட்டைத் தன்மை நிறைந்த வஞ்சக மாகும். போரினால் பெரிதும் பாதிக்கப்பட்டதும், அண்மைக கால சுனாமி பேரலையினால் பாதிக்கபப்ட்ட எமது தாயகப் பிரதேசததிற்கும், மக்களுக்கும் சர்வதேச ாதியாகக் கிடைக்கப்பட்ட சகல வளங்களும் இதுவரை முழுமையாகக் கிடைக்கவில்லை. மாறாக இந்த உதவிகள் அனைத்தும் நொருங்கிப் போயுள்ள ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தை மறுசீரமைக்கவும் தேர்தல் காலங்களில் சிங்கள மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிலைநாட்டவுமே பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இவற்றின் உண்மை நிலையையும், சர்வதேசமே விரும்பி நிற்கின்ற சமாதான முயற்சிகளுக்கு ஏற்பட்டுள்ள தடைகளையும், பாரபட்சத்தையும் அனான் கேட்டறிவார் என்ற பெரும் பீதியில் உண்மைகளை மறைக்க ஸ்ரீலங்கா அரசு இந்த கபடத்தன்மையை மேற்கொண்டதாக நாம் உணர்கின்றோம். இதனால் எம் மக்கள் பெரும ஏமாற்றத்தினால சமாதானத்தின் பாற்கொண்ட நம்பிக்கையையும் இழந்து நிற்கிறார்கள்.

ஐ.நா.செயலரின் இலங்கை விஜயம ஒரு அரசியல் நடவடிக்கையல்ல, மனிதநேய அடிப்படையில் மேற்கொண்ட விஜயமாகும். இது சமாதானத்திற்கான அரிய வாயப்பாகும். இதை அரசு போர் அரசியலாக மாற்றியதும், தனது நலனை முதன்மைப்படுத்தியதும் பேரினவாதத்தின உச்சவெளிப்படையாகும். இவை தொடர்வதை தாங்களும நாங்களும் அனுமதிக்க முடியாது என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ப)

## சுற்றுலாத்துறை அமைச்சரின் செயற்பாடு குறித்து பலர் அதிருப்தி

(கொழும்பு)

இலங்கையின் சுற்றுலாத்துறையையே ஆட்டங்காண வைத்த சுனாமிப் பேரலையின் போது இலங்கையின் சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா தனது விடுமுறையைக் களிப்பதற்காக கலிபோர்னியாவில் இருந்தார்.

நூற்றுக்கணக்கான உல்லாசப் பயணிகள் உயிர்நத்தும அவர் அனைவருக்குமாக ஒரு அனுதாபச் செய்தியை அனுப்பியதுடன் நின்று கொண்டார்.

இப்பாரிய அழிவு நாட்டிற்கு ஏற்பட்டிருந்தும் அவர் உடனடியாக நாடு திரும்பாதது குறித்து அவரின அமைச்சில் அவரது அதிகாரிகள் உட்பட பலரும் கோப முற்றிருபபதுடன் ஏமாற்றமும் அடைந்தனர்.

இப்பாரிய அனர்த்தம் இடம் பெற்றும் இருவாரகாலமாக அவர் வெளிநாட்டில் விடுமுறையில் தங்கியிருந்தார்.

அழிவு அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அவர் உடனடியாக நாடு திரும்பியிருக்கவேண்டும்.

இதேவேளை, அனர்த்தத்தை தொடர்ந்து கலிபோர்னியாவிலுள்ள விகாரையில் பூஜை ஒன்றில கலந்து கொள்ள அவர் முயற்சி செய்திருந்தும், அவரால் கலந்து கொள்ள முடியாமல் போய்விட்டது.

தனது நாட்டிற்கு என்ன தேவையென அறிந்து செயற்படாமல் இங்கு விகாரைக்கு அவர் வந்தால விரட்டியடிக்கப்படுவார் என அங்குள்ள சிங்கள மக்கள் விகாரை பீடாதிபதிக்கு தமது எதிர்ப்பைக் காட்டியதால் இவரின் முயற்சி கைகூடவில்லை. (க-6)

## சர்வதேச நாடுகளின் நிதி உதவிகள் புலிகளுக்கு நேரடியாகக் கிடைக்கக்கூடாது

### கோபிஅனானுக்கு ஜே.வி.பி. கடிதம்

(கொழும்பு).

இலங்கைத் தீவகத்தில் சுனாமி ஆழிப் பேரலையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளுக்கு உடனடியாக கப்பல்களையும் விமானங்களையும் உலங்கு வானூர்திகளையும மட்டுமன்றி தமது நாட்டுப் படைகளையும் வழங்கிய உலக நாடுகளுக்கு தமது நன்றிகளைத் தெரிவிப்பதாக ஜே.வி.பியினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன், இலங்கைக்கு பயணம்செய்த ஐக்கிய நாடுகளின செயலாளர் கோபி அனானின் வருகைக்கும நன்றி தெரிவிக்கும வகையில் ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைக்கு உதவியளித்த அனைத்து நாடுகளுக்கும் நன்றி. இரண்டாவது உலகப போரின் பின்னர் ஜேர்மனியும் ஜப்பானும் எழுச்சிபெற ஐக்கிய நாடுகள் சபையும் மேற்குலக நாடுகளும் வழங்கிய ஒத்துழைப்புப் போன்று இலங்கைக்கும் வழங்கவேண்டும என்று வேண்டுகோள் விடுக்கிறோம். சர்வதேச நிதி உதவிகள் விடுதலைப் புலிகளுக்கு நேரடியாக வழங்கக்கூடாது.

இதற்குரிய சகல ஏற்பாடுகளையும் ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ள வேணடும். வடக்கு கிழக்கு பகுதிக்கு நிவாரணப் பொருடகள் வழங்கப்படுவதில்லை என தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் தெரிவிக்கும் குற்றசசாட்டுகள் உண்மைக்குப் புறம்பானவையே. சர்வதேச தேர்தல் விதிகளுக்கு முரணான வகையில் தெரிவு செய்யப்பட்டுள்ள தமழ்த தேசிய கூட்டமைப்பினரின் கருத்துக்கள் குறித்து உலக நாடுகள் கவனம் செலுத்தத் தேவையில்லை என்றும் அதில் தெரிவிக்கபபட்டுள்ளது.

இதேவேளை , ஜே.வி.பியினர் 1987களில் இலங்கைக்கு இந்தியப் படை வருகை தந்த போது அநநிய படைகளின் ஆக்கிரமிப்பு என அதனை விமர்சித்த ஜே.வி.பி யினர் அதற்கு தமது கடும் எதிர்ப்பினை வெளிப்படுத்தியிருந்தமை இவ் வேளையில் நினைவு கூரத்தக்கது. (க-4)

## வவுனியாவில் மோட்ச அர்ச்சனை

(வவுனியா)

சுனாமியால் உயிரிழந்த அனைத்து மக்களின் ஆத்ம சாந்திக்கான மோட்ச அர்ச்சனை கடந்த ஞாயிறறுக்கிழமை காலை வவுனியா குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்றது.

வ்வுனியா மாவட்ட இந்து ஆலய குருமார்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆத்ம ஈடேற்றத்திற்கான நிகழ்வில் வன்னி சமாதான குழுவின் தலைவரும் வவுனயா விகாராதிபதி வண சீயம் பலகஸ்வவ விமலசார தேரோ, வணக்கத்திற்குரிய அருட் தந்தை டேவிட் குகனேஸ்வரன் ஆகியோரும,

வன்னி மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், வினோ நோகராதலிங்கம் மற்றும் வன்னி மாவட்ட பாதுகாபபுப் படைகளின் துணை கட்டளைத தளபதி மேஜர் ஜெனரல இரத்தினசபாபதி, கேணல் சேன நாயக்கா மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுபபாளர் தி.ஞானவேல், மாவட்ட அரச அதிபர் எஸ்.சண்முகம் உட்பட பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஏனைய ஆலய நிர்வாகிகள், பொது மக்கள், பெருமளவு இந்து குருமார் என பல தரப்பட்டவர்களும் இந்த மோடச அர்ச்சனை பிரார்த்தனை நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சுமார் ஆயிரம் விளக்குகள் இங்கு ஏற்றப்பட்டு பிரார்த்தனை செய்யப்பட்டது. பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுடைய ஆத்ம சாந்திக்காக நடத்தப்பட்ட இந்த நிகழ்வல் முதலாவதாக மோட்ச விளக்கேற்றல், அதனைத் தொடர்ந்து பிரார்த்தனை இடம்பெற்றது. (க-4)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனரமைக்க தொழில்நுட்ப உதவிகள் தேவை

### உலகநாடுகளிடம் ஜனாதிபதி கோரிக்கை

(கொழும்பு)

சுனாமி கடற்கொந்தளிப்பால பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார்.

பி.பி.சி.தமிழோசைக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு சர்வதேச நாடுகள் பல்வேறு விதமான உதவிகளை பல்வேறு வழிகளில் வழங்கி வருகின்றன.

ஆனால், தொழில்நுட்ப உதவிகளை வழங்குவதற்கு எந்த நாடும் இதுவரை முன்வரவில்லை. இது எமக்குக் கவலையளிக்கிறது.

வடக்கு-கிழக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் உட்கட்டமைப்புக்களைப் புனரமைப்புச் செய்வதற்கு பொறியியல் மற்றும் கட்டிட வரைவு நிபுண உதவிகள் தற்போது பெரிதும் தேவைப்படுகின்றன.

பாதிக்கபபட்ட பகுதிகளில் கட்டடங்கள் இடிந்த நிலையில் காணப்படுகின்றன. நாடுமுழுவதும் இவ்வனர்த்தம் ஏற்பட்டுக் கட்டட இடுபாடுகள் காணப்படுவதால் அதனை மீளக்கட்டியெழுப்புவதற்கு எம்மிடம் போதியளவு பொறியியல் மற்றும் கட்டட வரைவு நிபுணர்கள் இல்லை.

எனவே, மீள் கட்டமைப்புப் பணியினை உடனடியாகச் செய்ய வேண்டுமாயின் சர்வதேச நாட்டு நிபுணர்கள் தேவை என அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.(ப-4)

## நிவாரண மருந்துப் பொருட்கள் தனியார் மருந்துக் கடையில்

(கொழும்பு)

நிவாரணப் பணிகளுக்கென வைத்தியசாலை ஒன்றிற்கு அனுப்பிவைக்கப்பட்ட ஐந்து இலட்சம ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள், தனியாா மருந்து கடை ஒன்றில் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் கல்முனையில் இடம் பெற்றுள்ளது.

அவ் ஊர் மருந்துக் கடை ஊழியர்கள் கொடுத்த தகவல்களே இதனைக் கண்டுபிடிக்க உதவியது. கல்முனை பொலிஸார் விசேட அதிரடிப் படையினரதும், சுகாதாரத் திணைககள அதிகாரிகளின் துணையுடனும் இச்சம்பவம் பற்றி விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

வைத்தியசாலை அதிகாரிகளும் இவ்விசாரணைகளுக்கு உள்ளாக்கப்படக் கூடிய சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. (க)

## திருவாசக முற்றோதல்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை உப்புக்குளம் ஸ்ரீ சந்திரசேகரப்பிள்ளையார் கோவிலில் நாளை வியாழக்கிழமை காலை 7.30 மணிக்கு ஆலய பரிபாலக சபைத் தலைவர் தம்பு தியாகராஜா தலைமையில் திருவாசக முற்றோதல் நடைபெறும். (க-51)

## இன்று ஒரு தகவல்

# காதல் பறவைகள்

பரிவு, பாசம் போன்றவையெல்லாம் நம்மிடம் மட்டும்தான் உள்ளதென்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? நம்மிடம் உண்மையாகவே உள்ளதோ இல்லையோ இருக்கிறதென்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் சில பறவைகளிடம் பாசம் இருக்கிறது பாருங்கள் அவற்றை நினைக்கவே ஆச்சரியமாக இருக்கிறது.

நாரைகளில் 'சாரஸ்ஸ்கிரீன்' என்று ஓர் இனம். இந்த நாரைகள் இந்தியாவில் ராஜஸ்தான் காடுகளில் அதிகமாக இருக்கிறதாம். நாரை வகையிலேயே இந்த இனம் தான் 'மனிதன்' உயரத்திற்கு வளருமாம். உடம்பைப் பொறுத்தவரைக்கும் மனிதனுடைய உயரம். மனதைப் பொறுததவரைக்கும் அதைவிட அதிக உயரம். இதன் தலை சிவப்பு நிறம். உடல் நீலம் கலந்த சாம்பல் நிறம். மிக உயரத்தில் பறக்கும்.

இரண்டு நாரைகள் ஜோடியாக வானில் மிதந்து போகும அழகே அழகு. பறவைகளிலேயே 'சரஸ்ஸ்கிரீன்' ஜோடிதான் மிகவும் அன்பாகவும் நெருக்கமாகவும் வாழக்கூடியது. விவாகரத்து என்பதெல்லாம் அவற்றிடம் கிடையாது. ஒரு முறை ஜோடி சேர்ந்துவிட்டால் கடைசிவரைக்கும் இணைபிரிவதில்லை. சாப்பிடும் போதும் கூட இரண்டும் மிகவும் நெருக்கமாக நின்று கொண்டுதான் சாப்பிடும். பறககும் போது மட்டும் என்னவாம்? அப்போதும் கூட மிகவும் நெருக்கமாகத்தான் பறந்து கொண்டு போகும். இரை தேடும் விதத்திலும் இப்படித்தான். தனியாக எங்கும் செல்வதில்லை.

அண்மையல் ஒரு திருமணவீட்டுக்குச் சென்றிருந்தேன. ஒரு நண்பர் வந்திருந்தார். 'என்ன சார்! மனைவியை அழைதது் கொண்டு வரவில்லையா?' என்று கேட்டேன். "ஏன சார் வீண் தொந்தரவு. மனைவி புறப்படும் வரை நான் காத்துக்கொண்டிருந்தால் அதற்குள் இங்கு திருமணமே முடிந்துவிடும். அதுதான் நான் மட்டும் ஓடிவந்துவிட்டேன்" என்றார். இதைச் சொல்லும் போதே ஏதோ பந்தயத்தில் ஜெயித்ததுபோல் ஒரு வெற்றிக்களிப்பு அவரது முகத்தில்.

இதுபோன்ற செய்திகளை அந்த நாரைகள் அறிந்தால் மிகவும் கோபப்படும். நேராகவந்து கொத்திவிடடு போனாலும் போகும். ராஜஸ்தானில் உள்ள கிராமங்களில் குஞ்சுப் பறவையாக இருக்கும்போதே இந்த நாரைகளை வீடுகளில் வளர்க்கின்றனா. ஏன் தெரியுமா? அவை நாய் மாதிரி நன்றி விசுவாசத்துடன் நடந்துகொள்ளுமாம்.

ஒருவர் தன் வீடடில் இந்தப் பறவையில் ஒரு சோடியை வளர்த்துக்கொண்டிருந்தாராம. பண்டிகை வந்தது. ஆண் பறவையை இவர் துப்பாக்கியால் சுட்டுச் சமைத்துச் சாப்பிட்டுவிட்டாா. பண்டிகையை அவரும் அவரது குடும்பமும் சந்தோஷமாகக் கொண்டாடினர். ஆனால் தனது துணையை இழந்த அந்தப் பெண் பறவை என்ன செயதது தெரியுமா? மூன்று நாள்வரை எதுவும் சாப்பிடவில்லை. பட்டினியாகக் கிடந்து இறந்துவிட்டது. இதைப் பார்த்த பலரும் அதன்பின சாரஸ் ஸ்கிரீனைக் கொல்வதில்லையாம்.

இந்தப் பறவைக்கு நன்றாக நடனம் ஆடத்தெரியுமாம். அதற்கு நாரை நடனம் என்றே பெயராம். முதலில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் போய் நிற்கும். வண்டிச் சக்கரம் சுழல்வதுபோல் சுழன்று கொண்டிருக்கும். அதன்பின் தலையை மேலும் கீழும் ஆட்டும். தரையில் கிடக்கும் இறகுகளையும் சின்னச் சின்ன கல்லையும் தன்வாயால் கௌவி அவறறை அப்படியே அழகாகத் தூக்கிப்போடும். அழகான இறக்கையை வேகமாக அடித்துக்கொண்டே தாவித்தாவி ஓடும்.

இந்த நடனம் சுமார் 20 நிமிடம்வரை நடக்கும். ஒரு கூட்டத்தில ஏதாவது ஓரு பறவை ஏதாவது ஒரு காரணத்திற்காக நடனமாட ஆரம்பித்துவிட்டால் அந்தக் கூட்டத்திலுள்ள எல்லா பறவைகளும் ஒன்றாகச் சேர்ந்து ஆட ஆரம்பித்துவிடும். கூட்டமாகச் சேர்ந்து ஆடும் அந்தக் காட்சி பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். பாசமுள்ள இந்தப பறவை இனத்தை யாராவது பார்க்க ஆசைப்பட்டால் வண்டலூர் உயிரியல் பூங்காவில் போய்ப் பாருங்கள்:

ஆமாம்! பாசததை இப்போது மிருகக்காட்சிச் சாலையில் தான் தேடமுடியும் ஏன்? கடற்கரையில் தேடக் கூடாதா? என்று கேட்பீர்கள். ஏற்கனவே நான் தேடிப் பார்ததுவிட்டேன் என் காதில் விழுந்தது என்ன தெரியுமா?

ஒரு இளம் ஜோடி மிகவும் அன்பும், பாசமும் உள்ளவர்களாகத் தெரிந்தனர். அருகில் போய் என்ன பேசிக் கொள்கின்றனர் என்று ஒட்டுக்கேட்டேன். அந்த இளைஞன் கேட்கிறான் 'அன்பே! எப்போது நமது திருமணம்?' என்று. அந்தப் பெண் கூறுகிறாள் "கொஞ்சம் பொறுங்கள் எனக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையும் உங்களுக்கு ஒரு நல்ல பெண்ணும் கிடைக்கட்டும்" என்று.

இதற்குத்தான் சார் நான் அப்போதே சொன்னேன் வண்டலூருக்குப் போங்கள் என்று.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# நிவாரணப் பணிகளை முன்னெடுக்க நிர்வாகக் கட்டமைப்பு வேண்டும்

## கோபி அனானிடம் தமிழ்க் கூட்டமைப்பு வலியுறுத்து

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பகுதியில் மனிதாபிமான நிவாரண புனரமைப்புப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல தனியான நிர்வாகக் கட்டமைப்பு அவசியம் என்பதை தாம் ஐக்கிய நாடுகள் செயலரிடம் வலியுறுத்திக கூறியதாக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனானை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்து உரையாடிய போது இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இச சந்திப்பு தொடர்பாக இரா. சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கையில்,

மோசமாகப் பாதிப்புறற தமிழர் தாயகப் பகுதிக்கு கோ்பி அனான சென்று பார்வையிடாதது குறித்து அவரது கவனத்திற்கு கொண்டு வந்த போது அவர் வருத்தம் தெரிவித்ததாகக் குறிப்பிட்டார்.

சமாதானம் ஏற்படும் போது தாம் வந்து பார்வையிடவுள்ளதாகவும் கூட்டமைப்பிடம் கோபி அனான் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை அரசு கொழும்பிலிருந்து கொண்டு வடக்கு-கிழக்கில் பாதிப்புற்ற பகுதிகளில் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள முடியாது. இதனால் மக்களின் கருத்துக்களை அறிந்து பிராந்திய ரீதியாக அமைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமே நிவாரண உதவி வழங்கப்பட வேண்டும் எனவும் கோபி அனானிடம் சம்பந்தன் எடுத்துக் கூறியுள்ளார். சகல பிரதேசங்களின் அபிவிருத்தி தொடர்பாக அக்கறை கொண்டு ஐக்கிய நாடுகள் தமது உதவிகளை வழங்கும் எனவும் விரைவில் ஐக்கிய நாடுகள் சபையின் விசேட பெண் பிரதிநிதி ஒருவரை நிலைமைகளை அறிய அனுப்பவுள்ளதாக கோபி அனான் குறிப்பிட்டுள்ளார் என்றும் சம்பந்தன் தெரிவித்தார்.

மேலும் வெளிநாடுகளிலிருந்து பெறப்படும் நிதியுதவி நீதியாகவும் நியாயமாகவும் ஏற்பட்டுள்ள இழப்புகளுக்கு அமைவாக சகலருக்கும் வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டுமென அனானிடம் வலியுறுத்தியதாகவும் கூறினார்.

இதேசமயம், தமிழீழ விடுதலைப புலிகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும பாதிக்கப்பட்ட மக்களுக்காற்றிவரும் சேவைபற்றி கோபி அனானுக்கு கூட்டமைப்பினர் எடுத்துக் கூறிய போது அவர் இதுகுறித்து தான் ஏற்கனவே அறிந்துள்ளதாகக் கூறியதுடன் விடுதலைப் புலிகள் அமைப்பினதும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினதும் சேவைகளைப் பாராட்டினார்.

தனக்குத் தெரிவித்த தகவல்கள் அனைத்தையும் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருவதாகவும், ஐ.நா.சபை தன்னாலானவற்றையெல்லாம் செய்யும் என்றும் தெரிவித்த கோபி அனான் தான் திரும்பவும் இலங்கைக்கு வரவுள்ளதாகவும் அப்போது பாதிக்கப்படட சகல பகுதிகளுக்கும் செல்ல விரும்புவதாகவும் தெரிவித்தார்.

(து-4)

# கொரிய வைத்தியர்கள் திருமலையில் சேவை

(திருகோணமலை)

திருகோணமலைப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் 16 பேர் கொண்ட தென்கொரிய வைத்திய நிபுணர்கள் திருகோணமலைக்கு விஜயம் செய்துள்ளனர்.

இந்தக் குழுவினர் திருகோணமலை மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் வைத்திய சேவையை வழங்கிவரும் அதேவேளை, இவர்களில் ஒரு பகுதியினர் பள்ளத்தோட்டம், கப்பல்துறை, கிண்ணியா போன்ற கிராமங்களிலும் நடமாடும் வைத்திய சேவைகளையும் வழங்குவார்கள் என வடக்கு-கிழக்கு மாகாண ஆயுள்வேத திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

(ப-4)

# இராசி பலன்

**12.01.2005** (மார்கழி 28 புதன்கிழமை)

துதியை பி.ப. 02.01 மணிவரை

திருவோணம் பி.ப . 03.50 மணிவரை

இராகுகாலம் 12.33 - 2.03 மணிவரை

சுபநேரம் 5.03 - 6.33 மணிவரை

**மேடம்** தேகநலன், தொழில் விருத்தி, பிரபுத்தனம், எடுத்த கருமங்கள் கைகூடும்.

**இடபம்** புதிய திட்டமிடல், வஸ்த்திர நாசம், காரிய தாமதம், கட்டுப்பாடு.

**மிதுனம்** சரீர பீடை, எதிர்பாராத பிரச்சினை, பொருள் விரயம், முயற்சி தாமதம்.

**கடகம்** மனோ தைரியம், கீர்த்தி, நண்பர்கள் சந் திப்பு, முயற்சி கைகூடும்.

**சிங்கம்** ஆரோக்கியம், மனமகிழ்ச்சி, செய்தொழில், விருத்தி, சுபநிகழ்வு.

**கன்னி** பணக்குறைவு, காரிய இடையூறு, அஜீரண ரோகம், சொத்துப் பிணக்கு.

**துலாம்** புத்தி சஞ்சலம், பணவிரயம், ஆரோக்கிய குறைவு, முயற்சி தாமதம்.

**விருச்சிகம்** போசன நன்மை, இஷ்ட சித்தி, உறவினர் உதவி, கலந்துரையாடல்.

**தனுசு** போசன சுகக் குறைவு, பணவிரயம், கௌரவக் குறைவு, வேலைச் சுமை.

**மகரம்** வெகுமானம், புதிய உறவு, போசன சுகம், முயற்சிகைகூடும்,

**கும்பம்** பிறருக்கு உதவுதல், பிரயாணம், தனவிரயம், நித்திரைக் குறைவு

**மீனம்** கீர்த்தி, முயற்சி கைகூடும், பொருள் சேர்க்கை, புதிய விடயம்.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது
- வளவன்

# மட்டக்களப்பில் விமானமூலம் உணவுப் பொருள் விநியோகம்

(கொழும்பு)

மட்டக்களப்பில் சுனாமி பேரலையினால் பாதிக்கப்பட்டு தரைவழிப்பாதை துண்டிக்கப்பட்ட பகுதிகளுக்கு யுனிசெவ் அமைப்பினால் வழங்கப்பட்ட உணவுப்பொருட்கள் ஹெலிகொப்டர் மூலம் அமெரிக்க தொண்டர் படையினரால் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மட்டககளப்பு செபத் விளையாட்டு மைதானததிலிருந்து இந்த நிவாரணப் பொருட்கள் தரைவழிப்பாதைகள் துண்டிக்கப்பட்ட கல்லாறுப் பிரதேசத்துக்கு ஹெலிகொப்டர் மூலம விநியோகிக்கப்படுகிறது.

அதேவேளை, மட்டக்களப்பு மணமுனை பிரதேச மக்களுக்கு பிரிட்டிஷ் றோயல் இராணுவத்தினரும உலர் உணவுப் பொருட்களையும் மருந்துப் பொருட்களையும் கையளித்துள்ளனர்.

(க-8)

# அமெரிக்கப் படையினரின் வரவை விடுதலைப் புலிகள் எதிர்க்கவில்லை

## புலித்தேவன் அறிவிப்பு

(கொழும்பு)

"சுனாமி" அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கென அமெரிக்கப் படைகளின் இலங்கை வருகையினை தாம் எதிர்க்கவில்லையென தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வைத்து சர்வதேச ஊடகமொன்றுக்கு செவ்வியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் படைகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளவே இலங்கை வந்துள்ளன. அவர்கள் வேறு எந்த நோக்கத்திற்காகவும் இலங்கை வரவில்லை என அமெரிக்க இராஜாங்க செயலாளர் கொலின் பவல் உட்பட, இலங்கை வந்துளள இராணுவத் தளபதி கூடத் தெரிவிததுள்ளார்.

அதனை நாங்கள் ஏற்றுக்கொள்கின்றோம். மதிக்கின்றோம் என அவர்களின் வருகையினை நாங்கள் எதிர்க்கவில்லை.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் கோபி அனானை வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கு செல்லவிடாமல் அரசாங்கம் தடுத்தது. இதற்காக அது பல பிரசாரங்களைச் செய்தாலும் அனான் இறுதியில் உண்மைநிலைமையை உணர்ந்துள்ளார் என தெரிவித்த புலித்தேவன்,

இநத மோசமான துரோகச் செயலைச் செய்த அரசாங்கத்துடன் விடுதலைப் புலிகள் இணைந்து செயற்படுவார்கள் என்று எவ்வாறு எதிர்பார்க்க முடியும் எனவும் கேள்வி எழுப்பினார். (ப-4)

# 2004 / 2005 ஆம் கல்வியாண்டிற்கு யாழ். பல்கலைக்கழகத்திற்கு தெரிவானோர்

**2004/2005 கல்வியாண்டில் யாழ். பல்கலைக்கழகத்திற்குத் தெரிவான மாணவர்களின் பெயர் விபரம் இங்கு பிரசுரமாகின்றது. நேற்றையதினம் வெளியான பெயர்ப் பட்டியலில் நடந்துமுடிந்த அனுமதிப் பட்டியல் வெளியாகியமைக்காக வருந்துகின்றோம். (ஆ-ர்)**

## பௌதிக விஞ்ஞானம்

கே.கோபிநாத், எஸ்.காயத்திரி, எஸ்.சனாதனன், ரி.இன்பகரன், எஸ்.பிரநாலினி, வி.ஆர்.சுகிதன், எஸ்.குமரேசன், எம்.ஆனந்தகிருஷ்ணா, எஸ்.கஜவதனன், ரி.சுந்தரமூர்த்தி, வி.அகிலன், ஜி.அருளாநந்தம், ஜே.குணேசிங்கம், ஜி.பாலசுப்பிரமணியம், ஏ.பிரதீபன், எஸ்.மயூரன், ரி.வைரமுத்து, என்.பாலசிங்கம், எஸ்.சிவசுதன், வி.மனோரஞ்சன், ஆர்.ஜானகிராம், ஏ.கனிஸ்ரோ, வி.சிறிசிவதீபன், எஸ்.சத்தியன், இ.ரகுரட்ணம்,

வி.எதிர்வீரசிங்கம், எஸ்.மீரா, எம்.கலாரூபன், ஜே.பிரதீபா, வி.வீசிதன், கே.சிறிஜெயந்தன், எஸ்.கோபிகா, எஸ்.நவதர்சன், ஏ.அமிர்தராஜ், கே.அசோக்குமார், பி.டினேஸ்குமார், எஸ்.காந், ஆர்.சுவீந்தன், வி.நிமலேஸ்வரன், ஏ.கஜீவன், கே.அசோக்கண்ணா, எஸ்.கோபிநாத், எஸ்.குகசீலன், எம்.மயூரன், கே.ரங்கன், எஸ்.ரஜீவ்குமார், எஸ்.ஐ.பிரியதர்சினி, எம்.வசந்தரூபன், கே.அனுராதன், ஐ.லலித்குமார், எஸ்.ஜெயகாந், பி.செந்தில், ரி.லௌசிகன், ரி.கீர்த்தனா, பி.பிரதீபன், எஸ்.செந்தூர், ரி.இ.ஜீவிதா,

எஸ்.வித்யாபூசன், பி.தினேஸ், எஸ்.விஷ்ணுகாந்தன், என்.சுகிந்தன், எல்.யோககுருநாதன், எஸ்.ரதீபன், வி.சியாமளன், ரி.துசாந், ஆர்.ரமணி, எஸ்.நவகரன், வி.திருலோங்கீரன், ஜே.ஜனனி, எஸ்.அகிலன், என்.அஜிலன், எம்.அமல்ராஜ், வி.தனஞ்சயன், ஆர்.தவதுரைராஜா, ஆர்.நிரஞ்சன், என்.செந்தூரன், ரி.பிரதீபன், டி.நோயக், எஸ்.பிரேம்நாத், வி.கார்த்தீபன், பி.சயந்தினி, என்.புஸ்பதேவன், எஸ்.பார்த்தூரன், ஜே.திருச்செல்வம், பி.பிரதீபன், பி.ரங்கநாதன், கே.தர்சன், எஸ்.வேணுகானன், எஸ்.வெள்ளியம்பலம், என்.மாதவன், கே.சசிகரன், ஜி.மயூரன், வி.சிவரஞ்சன், ஜே.பரமராஜா, கே.பி.புருஷோத்தமன், வை.பூங்கலலோன், எம்.மலர்வேணி,

எஸ்.சுகன்யா, என்.அனோஜன், எஸ்.பிரமிளா, எம்.ஆர்.பிள்ளை, ரி.ஆனந்தசயனன், ரி.தனுஷா, ஆர்.சுதர்சன், கே.பகீரதன், கே.கௌரீசன், ஏ.ஜே.என்.அஸ்வர், ஆர்.அபிநாப், ஏ.ஏ.லகி, எஸ்.எஸ்.சிவரூபரஞ்சன், ஏ.சி.எம்.பினோஸ்டிர், என்.இந்திரசேனன், ஜி.சுபாஜினி, பி.ஸ்ரலின், எஸ்.துரைசிங்கம், ஆர்.லோககிரியா, எஸ்.வி.பிரதீப், இ.பௌல்ராஜ், எம்.இளநேசன், எம்.குகனேஸ்வரன், கே.புருஷோத்தமன், ஆர்.சுகிதரன், ஜி.கிரேசினி, ஜே.காந்தீபன்,

எஸ்.அனுசரன், எஸ்.பிரவின், எம்.எஸ்.எச்.மொஹமட், எஸ்.பத்மகேசன், எம்.அமலன், எஸ்.வி.றோய், வி.நிருபன், ஆர்.குணநாயகம், எவ்.எஸ்.ஜோசப், ஆர்.மனோகரன், எம்.குருபரன், என்.விஷ்ணுவரன், ரி.வினோதன், எம்.மதுவந்தி, சி.ஆர்.டயஸ்,

## முகாமைத்துவம்

எஸ்.சிவதாஸ், எஸ்.கீரன், என்.றதீகன், கே.கஜந்தன், ரி.நடேசன், பி.உபேந்திரா, எஸ்.வெங்கடேஸ்வரன், என்.சயந்தன், ஏ.சுயந்தன், ரி.கிரிதரன், எஸ்.அனுசியா, எஸ்.துஸ்யந்தன், எம்.கஜீவனா, எஸ்.பாஸ்கரன், எஸ்.சிவராஜா, ரி.கனகரட்ணம், ரி.ராஜீவன், எஸ்.ஜீவிதா, எம்.விஜிதா, எஸ்.அர்ச்சனா, எஸ்.மதனரூபன், எஸ்.ரஜிதா, கே.சுபாசினி, எம்.வி.ஜீவகன், வி.கருணாநிதி, வி.யுரேஸ், என்.ஜயதீபன், ஜே.ஜி.மயூரன், ரி.ஏ.பிரசாத், வி.சக்திவேல், கே.கலைச்செல்வன், வி.சாந்தகுமார், கே.துர்க்காதரன், என்.தாரணி, கே.தர்மலிங்கம், எஸ்.சிவகாந்தன், என்.விஜிதரன், ஏ.வி.யூட்குமார், என்.டேவிட், கே.கனகரட்ணம், ஆர்.விஜேந்திரன், எஸ்.சிவரூபன், வி.பிரகாஷ்,

ஆர்.அஜந்தன், கே.ரூபகாந்தன், கி.சிவதாஸ், எஸ்.நவரட்ணம், எம்.மார்க்கண்டு, கே.சுவீந்திரகுமார், எஸ்.சுதர்சினி, எல்.கொல்ரன், வி.கோபிநாத், கே.கார்த்தீபன், எஸ்.சுரேஸ்குமார், கே.அருட்குகன், எஸ்.ஜீவிதா, ஏ.நிரோஜன், எஸ்.சுரேஸ், ரி.இளங்கீதன், எம்.எம்.பி.பீற்றர், பி.குணரட்ணராஜ், ஆர்.சுபாசினி, கே.கேதீஸ்வரி, வி.சிறிரமணன், ஏ.தர்சியா, எஸ்.சத்தியகாந்தன், ரி.விஜயமதன், என்.குணபாலன், கே.அன்ரனிநெவில்தாஸ், எஸ்.சஜீவன், ஆர்.தேவரூபன், எஸ்.திருக்குமரன், கே.சுகுமார், எஸ்.எழிலரசி, கே.திலீப்குமார், ஆர்.கெங்காரட்ணம், எஸ்.சுரேஸ்குமார், பி.அச்சுதன், எஸ்.அனுஷா, பி.பார்த்தீபன், எஸ்.சிவாசினி, ரி.கே. அஜந்தன், எஸ்.நவரட்ணசிங்கம், பி. நிசாந்தன்,

ஜே.தங்கராஜ், ஏ.யோகராஜா, கே.கருஷ்ணமூர்த்தி, கே.யசோ, என்.மயூரன், ஆர்.வதனராஜ், கே.வசந்தராஜ், ரி.சண்முகராஜ், எஸ்.சுதர்சினி, ரி.ஆர்த்திகா, பி.பவலக்ஷன், ஏ.சுஜீவன், ஆர். அபராஜிதன், ஆர்.நிசாந்தன், எஸ்.விஜிதர், கே.சுஜீவன், ஜே.கஜேந்தி, என்.ஜனனன், ஏ.எஸ்.சுரேஸ், ரி.ஏ.கியூபேட், ஜே.கலைமதி, கே.தியானா, கே.கார்திகேசு, ஆர்.சிந்துஜன், எஸ்.பிரபாகரன், எஸ்.ரஜீவன், கே.கலீபன், ரி.தனபாலசிங்கம், வி.ரவிதரன், பி.அருட்செல்வன், ரி.கோகிலவாணி, எஸ்.சின்னத்துரை, கே.யூடி, ரி.தேவநேசன், கே.இராசையா, கே.பிரசாந்தி, பி.சயந்தினி, என்.சாரங்கன், வி.கிருஷாந்தி, ஆர்.ஜனரதன், கே.பிரியதர்சினி, ஆர்.ராஜ்கரன், இ.கே.வெல்டனோ, ரி.தியானி, எம்.மஜீபன்,

எஸ்.அனுஷா, எஸ்.உதயரேகா, கே.சுகுமார், ஜி.உதயனன், ரி.எஸ்.விஷ்ணுபிரசாத், கே.எஸ்.குமார், ரி.பிரபாகரன், ஏ.டினோசா, பி.தேவாநந்

## வர்த்தகம்

எல்.கவிகுமார், ஆர்.சண்முகவடிவேல், என்.லிங்கேஸ்வரன், பி.றவிராசா, எஸ்.தவக்குமார், ரி. பிரியா, யு. பிரியந்தினி, ஆர். சிறிகந்தராஜா, எஸ்.எ.ஜெ. லியோன், பி.கிரிந்தினி, ஆர். கிரிதரன், எஸ். நாகராஜா, ரி. பேபியாழினி, ரி.றஜினி, எஸ்.ராசநாயகம், எஸ்.பிரதீபன், பி. ஜெயராம், எஸ். நல்லநாதன், எ.பி. குணநாதன், என். செந்தூரன், எ.சுமன், பி.ஈசன், வி.எ.பிரசன்னா, ஜெ.புஸ்பநாதன், கே.சாந்தநேஸ்வரன், கெ.பரமலிங்கம், எஸ். சுபாகஜன், எ.சர்வேஸ்வரன், ரி.ஜெ. எமர்ஸன், என்.சி.எம். குரூஸ், எ.இ. அனிஸ்ரன்,

## விவசாயம்

எஸ். கார்த்திகா, எஸ்.அகல்யா, என்.யசீவன், கெ. அருள்நம்பி, ரி.ஆனந்தலிங்கம், எஸ். சிமாக்கி, கெ.உருத்திரறூபினி, எஸ்.வாகீஸன், வி.சரவணன், எ. அபிராமி, எ. டிலக்ஸனா, ஜெ. புஸ்பநாதன், ரி. செல்லத்துரை, பி. சத்தியறூபன், எஸ்.எஸ்.ஜெனன், ஜி. கஜமுகவர்ணன், சி. யதர்ஷினி, ஜி. யதுநந்தன், பி. சோதீஸன், யு. அஜிதா, ரி. முகுந்தன், எஸ். திருநாவுக்கரசு, ரி. சைலந்தி, ஜெ. துஷ்யந்தன், எஸ். சந்திரிகா, பி. வஜிதா, எம்.டபிள்யு. ஜெயந்தா, வி. கௌரிபாலன், பி. சிந்துஜா, ரி. சிவரட்ணம், என். யோககுருநாதன், எம்.ஆர்.எம். றமீஸ், எ. சிவஞானம், எஸ். கோபிகிருஷ்ணா, ஆர். கேசரூபன், வி.வி. பிள்ளை, கெ. சுயந்தன், ரி. ஐங்கரன், எம். கோபிகிருஷாந், பி. நிஷாந்தினி, ஜெ. ஜனனி, பி. மெனுஜா, பி. ஹேமபாலா, எஸ்.வி. லோகினி, ஜி. மதணநாயணன், எம். டெசிதா, ஜெ. யூட்சுவென், ரி. விதுரன், ரி. நாகராஜா, ரி. சுந்தரலிங்கம், யு. உகநாதன், சி. கனகலிங்கம், ஜி. குகேந்திரா, எஸ். செல்வரட்ணம், எம். பிரியதர்ஷினி, எல். றிஸிகாந், எஸ். பிரியதர்ஷினி, எஸ். சுந்தரமூர்த்தி, என்.டபிள்யு. நிஷாந்தினி, பி. றேசாசிறீறாணி, எஸ். கிரூசிகேசன், ஜெ.எம்.ஆர். றோசி, சி.ரி. எம். அஞ்சலா, வை.இ. பிலிப்புப்பிள்ளை, எ.ஏ. றீகன்,

## உயிரியல் விஞ்ஞானம்

எ.சண்முகதாஸ், ஆர்.கஜனனன், கே. அனுசன், கே. கரிச்சந்திரன், என். சோமகாந்தன், ஜெ. சடாட்சரம, என். சிவபாதம், எஸ்.தேவகி, ஐ.எ.ரஸ்மி, ரி.அனிர்தா, என். கல்யாணி, பி. நவரத்தினராஜா, ஜி.குமரகுலசிங்கம், ரி.சிறிபதி, யு.தமிழ்மாறன், ரி.ரி.டெசியா கயல்விழி, எஸ்.திவாகரன், ரி.தர்மலிங்கம், வி.பரஞ்சோதி, எம்.விஸ்னுகாந், எஸ்.வசீதரன், எஸ்.ரிசாந்தன், எஸ்.கோவைகுமரன், வை.குகதாஸ், எஸ்.சிந்துஜா, சி.ரமணதாஸன், ஜி.பிரேமிலா, ஏ.மகாதேவன், வி.கருணாநிதி, வி. சின்னராசா, எஸ். கிருபாகரன், வி. சாரங்கன், ரி. தங்கராஜா, எம்.ஏ.. தர்மலிங்கம், ஜே. மேனகா, ஜி. கிருஷாந்தன், எஸ். பிரதாஸ், ஏ. விவேகானந்தன், பி.பி. சேவியர், கே. விமலன், கே. கலைத்தீபன், எஸ். வினோஜா, எஸ். வசீகரி, கே. கண்ணதாசன், பி. ஜெகன், எஸ். நிசாந்தி, ஜே. லதாங்கி, எம். ராகுலன், எம். முகுந்தன், வி. ராதா, ஆர். சுகிர்தா, ஏ.ஏ. கூன்சி, பி.வி.ஏ. ரவல், என். கரேஸ்வரன், ஜே.பி.சி. மார்க், ஜே.எப். குறூஸ்,

## சட்டம்

ரி.வினோதன், ஜி.முதுராசா, ஆர்.அகிலன், ஆர்.றட்ணசிங்கம், டி.கே.சுராஞ்சி, ஈ.எம்.லோகநாதன், வை. பாலகங்காதரன், ஏ.கார்த்திகா தேவி, டி.ஏ.பி.ஏ.குமாரி, கே.சுகாஸ், ஜி.காயத்திரி, எஸ்.தாரணி, எஸ்.குமாரன், பி.பிரதீபா, பி.சியானி, வி.மணிவண்ணன், என்.வசீகரன், எம்.பி.எம்.பௌசான், எம்.ஏ.சித்திகா, என்.நிஸாந், ஏ.டபிள்யூ.எம்.பாக்கி, எம்.கே.எம்.கில்மி, ரி.அர்ச்சுனா, எம்.ஏ.எம்.முபாரக், என்.பிரியந்தன்.

---

**கல்வியியல் கல்லூரி...** ( ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## நூலக விஞ்ஞானம்.

சுபநிதி பாலசிங்கம் கொக்குவில் கிழக்கு, கந்தசாமி மோகனா சுன்னாகம், சுஜிதா சர்வானந்தன் கஸ்தூரியார் வீதி, மோன்போட் வினோஜினி சுன்னாகம், கவியரசி யோதிராஜா அளவெட்டி வடக்கு, கணேசபிள்ளை மணிமாலவன் சாவகச்சேரி, திருமகள் கவிந்திரதாஸ் அச்சுவேலி, சிவலிங்கம் தேனுசா தெல்லிப்பளை, கனகசபேசன் திவ்யா ஏழாலை தெற்கு, மோனகுரு மோகனா வல்வெட்டித்துறை, பால்சுப்பிரமணியம் கஜேந்திரன் கொழும்புத்துறை, கதிர்காமநாதன் தனஞ்செயன் மீசாலை, கலைவாணி கந்தையா மட்டுவில் வடக்கு, சிவஞ்ஞானவேல் மதுசூதனன் வல்வெட்டித்துறை, ஸ்ரீப்பிரியா சிறிகுமார் பிறவுண் வீதி, மரியதாஸ் மரோமாக்சன் யாழ்ப்பாணம், பேரின்பன் லியோனிற் கிருபாகரன் சுதுமலை வடக்கு, நிரஞ்சனா பத்மநாதன் பருத்தித்துறை வீதி, மரியநாயகம் மேரி டயானா நவாலி தெற்கு, தர்மராஜா அரவிந்தநேசன் வண். மேற்கு, செல்வராஜா இந்திராதேவி கட்டுடை, அருமைத்துரை அனுசா தாளையடி, சதாசிவம் மலர்விழி தாவடி கொக்குவில், குணரெத்தினம் ரகுநாதன் புலோலி மேற்கு, லோகநாதன் சபேஷ் நீர்வேலி வடக்கு, சிவானந்தன் லின்கன் சுண்டிக்குளி, பாக்கியநாதன் கிரிசங்கர் கோப்பாய் தெற்கு, பாக்கியநாதன் கார்த்திகா அளவெட்டி, துரைராஜா சுரேந்திரன் கோண்டாவில் கிழக்கு, சண்முகவடிவேல் ராதிகா அராலி மத்தி, ஜெனீவேரோணா தில்லைநாயகம் மத்தியூஸ் வீதி, கணேசபிள்ளை பகீரதன் அரியாலை, சங்கரப்பிள்ளை சுதாசினி சாவகச்சேரி, பிரதீபா பொன்னுத்துரை அளவெட்டி வடக்கு, ஜெயப்பிரியா சிறிஸ்கந்தராவி யாழ். இந்துக்கல்லூரி ஒழுங்கை, நிசாந்தினி நாகராஜா பருத்தித்துறை, ஜெபனேசன் ரெக்சன் குருநகர், தவராஜா கௌசிகன் தாளையடி, ரோகிதா நகுலேஸ்வரன் நாவற்குழி தெற்கு கைதடி, தர்சிகா தர்மகுலசிங்கம் கொக்குவில் மேற்கு, படைவீரசிங்கம் ரஜீவ் மட்டுவில் தெற்கு.

---

**வடமராட்சியில் தாக்கிய சுனாமி அனர்த்தத்தால்**

# பாதிக்கப்பட்ட மக்களை மீளக்குடியமர்த்த பாதுகாப்புப் படையினர் நடவழிக்கை

(பலாலி)

கடல் கொந்தளிப்பினால் இடம் பெயர்ந்த மக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் வீடுகளை இழந்தும் சேதமடைந்துள்ள வீடுகளையும் குடிநீர் கிணறுகளையும் சுத்தப்படுத்தி மீண்டும் மக்களை மீளக்குடியமர்த்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் ஆலோசனைக்கமைய மீட்புப் பணிகளை பாதுகாப்பு படையினர் மேற்கொண்டுள்ளனர்.

இதன்படி 524 படையணி தலைமையகம் அமைந்துள்ள பகுதியில் இந்த வேலைத் திட்டங்கள் கேணல் ரத்நாயக்காவின் தலைமையில் கடந்த 9 ஆம் திகதி காலை ஆரம்பிக்கப்பட்டன.

பருத்தித்துறையில் முனை மீன்பிடி கிராமத்தில் ஏற்பட்டிருந்த இடிபாடுகளை அகற்றி அப்பகுதியில் அமைந்திருந்த நிவ் எஜேஸ்மின் இண்டர்ஸ்ரியல் பைபர் கிளாஸ் மேல்டின் படகு திருத்துமிடத்தில் காணப்பட்ட சேதமடைந்த பொருட்களையும் பாதுகாப்பு படையினர் சுத்தம்செய்துள்ளார்கள்.

மேலும் தும்பளைப் பிரதேசத்திலுள்ள மக்கள் பயன்படுத்திய குடிநீர் கிணறுகள் இரண்டாவது கெமுனு தொண்டர் படைப் பிரிவினரால் சுத்தப்படுத்தி மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளதுடன் சக்கோட்டை மீனவர் கிராம மக்கள் பயன்படுத்தும் வகையில் அப்பகுதியிலுள்ள குடிநீர் கிணறுகள் இரண்டாவது சிங்க படை தொண்டர் பிரிவினரால் சுத்தம் செய்யப்பட்டு மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளன. (ப)

## கலந்துரையாடல்

நிவாரணப்பணி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு கரவெட்டி பிரதேசசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே. கணேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப்பணிகளை மேற்கொள்வது தொடர்பாகவும் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனர்நிர்மாணம் செய்வது தொடர்பாகவுமே கலந்துரையாடப்படவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு சம்பந்தப்பட்ட கல்வித்திணைக்கள அதிகாரிகளையும் உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகளையும் கடற்றொழிலாளர் சங்கங்களின் தலைவர்களையும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (க-19)

# தமிழ் மக்களைப் புறக்கணிக்கும் செயல்களை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்

## யாழ்.பல்கலை மாணவர் ஒன்றியம் ஆளுநருக்கு மகஜர்

சுனாமி அனர்த்தம் காரணமாக இலங்கைத் தீவு என்றுமே சந்தித்திராத பெரும் அழிவுகளைச சந்தித்துள்ளது. குறிப்பாக வடக்கு-கிழக்குத் தமிழர் தாயகப பகுதிகளே பெருமளவான அழிவிற்குள்ளாகியுள்ளது.

இவ்வாறு அழிவுகளை எதிர் கொண்ட வடக்கு-கிழக்கு மக்களுக்கு நியாயமாக நிவாரணப் பணிகளை மேற்கொள்ளாமலும், இலங்கைக்கு விஜயத்தினை மேற்கொண்ட ஐக்கிய நாடுகளின செயலாளர் நாயகம் கோபி அனான மிகவும் மோசமாகப பாதிக்கப்பட்ட பகுதிகளைப பார்வையிடாமல் தடுத்தும், தமிழர்களையும், தமிழர் தாயகப் பகுதிகளையும் புறக்கணிக்கின்ற நடவடிக்கைகளிலேயே ஆட்சியிலுள்ள அரசாங்கத் தரப்பும், நாட்டின் ஜனாதிபதியும் ஈடுபட்டுக் கொணடிருக்கின்றார்கள்.

இவ்வாறு யாழ்.பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தினரால் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுனரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் குற்றம் சாட்டப்பட்டுளளன.

அதில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது,

வடக்கு-கிழக்கு ஆளுநர் என்ற வகையில் தங்களிடம் நாங்கள் குறிப்பிட விரும்புவது பெரும் அழிவுகளைச் சந்தித்துள்ள எமது பிரதேசத்தினையும், பெரும் அழிவுக்குள்ளாகியுள்ள வடக்கு-கிழக்கு மக்களையும், நியாயமான முறையில் புனர்வாழ்வளிக்க அரசாங்கம் முன்வர வேண்டும்.

அத்துடன், பாதிப்புக்குள்ளான வடக்கு-கிழக்குப் பகுதிகளை நேரில் பார்வையிட வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு அனுமதி கொடுத்து, எமது மக்களின உண்மையான இழப்புக்களை மதிப்பிட வேண்டும். இதனை விடுதது, உண்மையான இழப்புக்களை இருட்டடிப்புச் செய்வதும் உண்மைக்குப் புறம்பான புள்ளி விபரங்களை வெளியிடுவதும் அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையைக் குலைப்பதற்கான நடவடிக்கையாகவே நாம் கருதுகின்றோம். அத்தோடு இயற்கையின் அனர்த்தத்தினை அரசியல் கபட நாடகங்களுக்குப் பயன்படுத்திக் கொண்டிருப்பதனையும் தமிழ் மக்களாகிய நாம் கண்டிக்கின்றோம்.

பெரும் அழிவினை பொருட்படுத்தாது, வெறுமனே பொய்ப் பிரசாரங்களையும் அரச ஊடகங்களூடாக உண்மைக்குப் புறம்பான காட்டுமிராண்டித்தனமான ஊடகப் பிரசாரங்களையும், இனியும நடைபெறாது தடுத்து, வடக்கு - கிழக்கு மக்களது நிவாரணப் பணிகளுக்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரியாகச் செயற்பட வேண்டும என்பதனையும் இங்கு குறிப பிட விரும்புகின்றோம்.

அத்தோடு, பாதிக்கப்பட்ட தமிழ பேசும் மக்கள் விடயத்தில் அரசாங்கம் கருணையற்ற விதமாகச செயற்படுவதனை நிறுத்த வேண்டும் என்றும் வேண்டுகின்றோம் என அதில் மேலும் குறிப்பிடபபட்டுளளது. (ப-19)

# சுனாமி தகர்த்த பாலங்களை புனரமைக்க 45 மில்.தேவை

### பெருந்தெருக்கள் அமைச்சு மதிப்பீடு

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பாலங்களைப் புனரமைக்க 45 மில்லியன் ரூபா செலவு ஏற்படும் என மதிப்பீடு செய்யப்பட்டிருப்பதாக பெருந் தெருக்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட வீதிகள் மற்றும் பாலங்களைப பார்வையிட பெருந் தெருக்கள் பிரதியமைச்சர் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் குழுவொன்று முதற்கட்டமாக கிழக்குப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

திருத்த வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ள ஏனைய பிரதேசங்களைச் சேர்ந்த வீதி அபிவிருத்தி அதிகார சபையின பொறியியலாளர்களையும், இயந்திர உபகரணங்களையும் பயன்படுத்துமாறு பிரதியமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

போக்குவரத்து உடன் ஏற்படுத்தும் வகையில் தற்காலிக பாலங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ப-4)

# பாதிக்கப்பட்ட மக்கள் பொலிஸ் நிலையத்தில் பதிவு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் ஆழிப பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் இழப்புகள் தொடர்பான முறைப்பாடுகள் பதிவு செய்யத் தொடங்கியதையடுத்து, பொலிஸ் நிலையங்களில் நீண்ட வரிசைகள் தற்போது காணப்படுகின்றன.

மடடக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை முதல் அம்பாறை மாவட்டம் பொத்துவில் வரை 11 பொலிஸ் நிலையங்களில் இந்த வரிசைகளைக் காணக்கூடியதாகவுள்ளது.

நிலைமையை சமாளிக்கும் வகையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொலிஸாரினால் விசேட படிவங்கள் வழங்கப்பட்டு அதில விபரங்கள் பெறப்பட்டு ஆவணப படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கென பொலிஸ் நிலையங்களில் விசேட பிரிவுகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மட்டககளப்பு பொலிஸ் நிலைய அதிகாரியொருவரின் தகவலின்படி நாளொன்றிற்கு 200 முறைப்பாடுகள் வரை பதிவு செய்யப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-4)

# குண்டு வீச்சு சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் வாகனேரியில் கடந்த 8ம் திகதி இரவு இடம்பெற்ற கைக்குண்டு வீச்சு சம்பவம் தொடர்பாக இரு இளைஞர்கள் வாழைச் சேனை பொலிஸாரினால் கைது செய்யபபட்டுள்ளார்கள்.

மரண வீடொன்றில் சீட்டாடிக் கொண்டிருந்தவர்கள் மீதே இந்தக் கைக்குண்டு வீச்சு நடத்தப்பட்டது.

இந்த சம்பவத்தில் 8 வயது சிறுவன் உட்பட மூவர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்கள். பெண்கள், குழந்தைகள் உட்பட 37 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது மதம் தொடர்பாக இரு பிரிவினருக்குமிடையே கடந்த இரண்டு வாரகாலமாக நிலவி வந்த முரண்பாடுகளே இதற்கு காரணம் என தெரியவந்துள்ளது. இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கிறிஸ்தவ தேவாலயத்தின் போதகரொருவரின் மகனான மணியம் ஜெயபிரகாஸ (வயது 24), கணபதிப்பிள்ளை கமலநாதன் (வயது 20) ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் இருவரும் நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு மாவட்ட மேலதிக நீதிபதி எம்.எச். எம்.அஜ்மீர் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டு அவரது உத்தரவின் பேரில் எதிர் வரும் 19ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்கள். (க-4)

## பரீட்சைப் பதிவுகள்

(கல்வியங்காடு)

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி கலை முதற்தேர்வு பரீட்சைக்கான பதிவுகள் இன்னும் இருவாரத்தில் மேற்கொள்ளப்படும் என உதவிப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இதற்கு முதல் நடைபெற்ற கலை முதற்தேர்வுப் பரீட்சை முடிவுகள் எப்போது வெளியிடப்படும் எனக் கூறமுடியாது என்றும்,

விரிவுரையாளரின் புள்ளிகள் வழங்கப்படவில்லை என்பதோடு சில மாணவர்களின் பெயா விபரங்கள் மாறுபட்டுள்ளமையே இதற்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்தார். (க-74)

## பஸ் உரிமையாளர்கள் வேலணையில் மறியல்

(யாழ்ப்பாணம்)

வேலணை முத்துமாரி அம்மன் கோயில் வீதியைத் திருத்தக கோரி தீவுப் பகுதி தனியாா பஸ் உரிமையாளர்கள் நேற்று முன்தினம் மறியல் பேர்ராட்டத்தில் ஈடுபட்டனர்.

வேலணை பஸ் கம்பனிக்கு அண்மையில் பிரதான வீதியை மறித்து அவர்கள் போராட்டத்தில ஈடுபட்டனர். இதனால் போக்குவரதத்து சில மணிநேரம் தடைபபட்டது.

இதேவேளை, பண்ணைப் பாலம் முதல் தீவுப் பகுதிக்குச் செல்லும பிரதான வீதி மிகவும் மோசமான நிலையில் சேதமாகியுள்ளமை குறிப்படத்தக்கது. (ச)

## உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி

(கொழும்பு)

கல்விப் பொதுத் தராதர உயாதரப் பரீட்சை திட்டமிட்டபடி ஏப்ரல் மாதத்திலேயே நடைபெறும என கல்வி அமைச்சு அறிவித்துள ளது.

மாணவர்கள் தமது பாடப்புத்தகங்களைத் தொலைத்திருந்தால் அதனை கல்வி அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும் எனவும் சுனாமிப பேரலையின் காரணமாகக் காணாமல போன கல்விச் சான்றிதழ்களை மீண்டும் வழங்குவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துளளது எனவும் கல்வித் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணம் அறிவிடாமல் இந்தச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர மற்றும் உயர்தரப் பாட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழ்கள் ஏனைய கல்வித்தகமை சான்றிதழ்களும் புதிதாக வழங்கப்படவுள்ளது. நடமாடும் சேவை ஊடாகவோ அல்லது வேறு நடவடிக்கை ஊடாகவோ இந்த சான்றிதழ்கள் விநியோகிககப்படும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (க-04)

### கனரக வாகனங்கள் இல்லாதமையினால்

# வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மந்தகதியில் மீட்பு நடவடிக்கை

(மட்டக்களப்பு)

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு இரணடு வாரங்கள் கடந்துள்ள போதிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் மிகவும் மந்தகதியிலேயே உட்கட்மைப்பு, மீள்கட்டுமான வேலைகள் இடம் பெற்றுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

சுனாமி அனர்த்தம் காரணமாகப பாதிக்கப்பட்ட தென்பகுதி பிரதேசங்களில் கனரக வாகனங்களின் உதவியுடன் மிகவும் துரித கதியில் மீள்கட்டுமான வேலைகள் இடம் பெற்றுவரும் அதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணக் கரையோரப் பிரதேசங்களில் மிகவும் மந்தகதியிலேயே மீட்பு வேலைகள் இடம்பெற்று வருவதாக கவலை தெரிவிக்கப் படுகின்றது.

போதியளவு கனரக வாகனங்கள் இல்லாமையினாலேயே மீள் கட்டுமான வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கடல் பேரலை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மடடக்களப்பு மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் மின்சாரம், தோலைபேசி, நீர் விதியோகம் என்பன தொடர்ந்தும் தடைப்பட்டுள்ளன.

மீள்கட்டுமானப் பணிகள் மநதகதியில் இடம்பெற்று வருவதால் இடம்பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதில தாமதம் ஏற்பட்டுள்ளது. (க-9)

# நலன்புரி நிலையங்களில் தொடர்ந்தும் வைத்திய சேவை

(கொழும்பு)

நலன்புரி நிலையங்களில் தாம் மேற்கொள்ளும் வைத்திய சேவைகள் தொடர்ந்தும் முன்னெடுத்து செல்லப் போவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தோடு விசேட கலந்துரையாடலை நடத்தியுள்ளது.

இக் கலந்துரையாடலில் நலன்புரி நிலையங்களுக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது பற்றி ஆராயப்பட்டது.

இதேவேளை மருந்துப் பொருட்களை வழங்கும் பொதுமக்கள் சுகாதார அமைச்சின் விநியோகப் பிரிவுடன் தொடர்பு கொள்ள வேண்டுமென மருத்துவ அதிகாரிகள் சங்கம் பொதுமக்களைக கேட்டுள்ளது. (க-9)

# உதவு பொருட்களுடன் இன்னும் பல கப்பல்கள் வரும்

## கடற்படை பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் வகையில் அத்தியாவசிய உதவிப் பொருட்களுடன் பல வெளிநாட்டுக் கப்பல்கள் இலங்கை வர இருப்பதாக கடற்படைப் பேச்சாளர் ஜயந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கை வரும் இக்கப்பல்களில் 7 அமெரிக்கக் கப்பல்களும அடங்குகின்றன. ஏற்கனவே இவற்றில் ஒன்று இலங்கை வந்துள்ளது. பாகிஸ்தானில் இருந்து உதவிப் பொருட்களுடன் இரண்டு கப்பல்களில் நேற்று முன்தினம் இலங்கை வந்துள்ளன. இதைவிட பிரித்தானியக் கப்பல் ஒன்று மட்டக்களப்புக் கடற் பிரதேசத்தில் நங்கூரம் இட்டுள்ளது.

இந்தியாவில் இருந்து இதுவரை அதிகமான கப்பல்கள் இலங்கைக்கு வந்து உதவிகளை வழங்கி வருகின்றன.

இதேவேளை உதவிப் பொருட்களுடன் 180விமானங்கள் இதுவரை இலங்கை வந்திருப்பதாக கட்டுநாயக்க விமான நிலையத்தின் அத்தியாவசிய தேவை தொடர்பான ஒருங்கிணைப்பு நிலையம் அறிவித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ப-4)

# சிகிச்சை பெற்ற சிறுவனைக் காணவில்லை

(சாவகச்சேரி)

முல்லைத்தீவைச் சேர்ந்த தெய்வேந்திரன் அமலன் எனும் 12வயதுச் சிறுவன் கடல் அனர்த்தத்தின் போது காயமடைந்து முள்ளியவளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றபின் காணாமல் போயுள்ளான்.

இவனது சகோதரி 17 வயதுடைய தெய்வேந்திரன்-அருணா, தண்ணீருற்று மகாவித்தியாலய நலன்புரி முகாமில் தங்கியுள்ளார்.

இவரது தாய், தந்தையரையும் காணவில்லை. இவர் பற்றித் தெரிந்தவர்கள் சகோதரி உடனோ அல்லது சாவகச்சேரி லிகோரியார் தேவாலயத்தில் தங்கியுள்ள தவம் என்பவருடனோ தொடர்வு கொண்டு தெரிவிக்குமாறு கேட்கப்படுகின்றனர். (க-29)

# புத்தாண்டுப் பலன்கள் உங்களுக்கு எப்படி?



## கும்பம்

நங்கள் வலிமை பொருந்திய தேக அமைப்பும், கூர்மையான பார்வையையும, உயரமான உருவமும் கொண்டு பார்வைக்கு எளிமையான தோற்றம் உடையவர்கள். தோற்றத்திற்கும் வசதிக்கும் சற்றும் பொருத்தமே இருக்காது. யாரையும் பார்த்த மாத்திரத்தில் அறியக்கூடிய மனப்பக்குவம் கொண்டவர்கள். எதையும் சுலபத்தில் யூகிக்கும் ஆற்றலைக் கொண்டவர்கள்.

சனி பகவான் வருட ஆரம்பம் முதல் 25.06.2005 முடிய உங்கள் ராசிக்கு ஐந்தாமிடத்தில் சஞ்சரிக்க உள்ளார். இதனால், செய்தொழில் வியாபாரங்களில் அபிவிருத்தி உண்டாகும்.

26.06.2005 முதல் வருடம் முடிய உங்கள் ராசிக்கு ஆறாமிடத்தில் சஞ்சரிக்கவுள்ளார். இதனால் விரயச் செலவுகள் மட்டுப்படும். எதையும் துணிந்து செய்யும ஆற்றல் உண்டாகும். பல பெரிய மனிதர்களின் உதவிகட்டும். பொருளாதாரச் சிக்கல் தீர்ந்துகையில பணப்புழக்கம் உண்டாகும். அடிப்படை வசதிகள் பெருகும். பழைய பாக்கிகள் தானாக வசூலாகும்.

குரு வருட ஆரம்பம் முதல் 19.09.2005 வரை உங்கள் ராசிக்கு எட்டாமிடத்தில் சஞ்சரிக்கவுள்ளதால இதனால் உடல் நலம் பாதிப்படையும். யாருககும் அஞ்சாத நிலை மாறி பயம் தோன்றும். மனம் கவலையால் அலைமோதும். செய்தொழில் வியாபாரம் பலன் தராது. பிரயாணங்களில் விழிப்போடு இருப்பது நல்லது.

19.08.2005 முதல் வருடம் முடிய குரு ஒன்பதாமிடத்தில் சஞ்சரிப்பதால் மனம் தெளிவடைந்து மாபெரும் காரியங்களில் ஈடுபாடு உண்டாகும். வியாபாரிகள் பெரும் பொருள்வரவினை அடைவீர்கள். திருமணமாகாத இளம் வயது ஆண் பெண்களுக்குத திருமண முயற்சிகள் வெற்றி பெறும்.

ராகு-கேது: இவ்வருட ஆரம்பம் முதல் 04.03.2005 வரை ராகு மூன்றாமிடத்திலும் கேது ஒன்பதாமிடத்திலும் சஞ்சரிக்க உள்ளார்கள். இதனால், நீங்கள் ஈடுபடும் துறை எதுவாக இருந்தாலும், அதில பேரும் புகழும் கிட்டும்.

### ஜனவரி

குடும்பம்: கணவன் மனைவி ஒற்றுமை நன்று. பிள்ளைகள் சம்பந்தப்பட்ட விடயங்கள் எல்லாம் நல்ல ப்டியாக நடக்கும். பெரியவர்களின் ஆதரவும் ஆசீர்வாதமும் கிட்டும். பொருளாதாரம் : நாலா வழிகளிலும் வருமானம் வந்து கொண்டிருக்கும். அனாவசியச் செலவுகள் குறையும். கொடுக்கல் வாஙகல சரளமாக இருக்கும். ஆரோக்கியம்: நல்ல நிலையில் இருக்கும். தொழில் வியாபாரம்: சிறந்த வளம்பரங்கள், புதிய அணுகுமுறை - விற்பனைக்குப பிந்திய சிறந்த சேவை தரமான பொருட்கள முதலியவற்றால் விற்பனை பெருகும். இலாபம் அதிகரிக்கும். பெண்கள்: நீண்ட நாளாக எதிர்பார்த்திருந்த சில காரியங்கள் இம் மாதத்தில் நிறைவேறும். சிலருக்கு சுபகாரிய வாய்ப்புகள் உண்டாகும். மாணவர்கள்: கம்பியூட்டர் துறையினர் ஏற்றம் பெறுவர்.
சாதகமான திகதிகள் : 1,3,4,7,9,14,15,20,26,27,30.

### பெப்ரவரி

குடும்பம் : கணவன் மனைவி ஒற்றுமை திருப்திகரம். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளை நிறைவேற்றி வைக்க முயற்சி செய்யுங்கள். பொருளாதாரம்; வருமானத்திற்குத் தடையில்லை. அதே சமயம் செலவுகளுக்கும் குறைவில்லை. கொடுக்கல் வாஙகல் பிரச்சினைகள் இல்லாமல் இருக்கும். தொழில் வியாபாரம்: நல்ல நிலையில் இருக்கும். சில நவீன உத்திகளைப் பயன்படுத்தி உற்பத்தி மற்றும். விற்பனையைப் பெருக்கலாம். பெண்கள்: நீண்ட நாள் கனவு நிறைவேறும். பிள்ளைகளின் நலனுக்காக சில திட்டஙகளைச் செயல்படுத்துவீர்கள். மாணவர்கள்: விஞ்ஞானத்துறையினர் தீவிர கவனம் செலுத்தவேண்டும்.
சாதகமான த'கத'கள் : 3,4,16,17,21,22,25,26,27.

### மார்ச்

குடும்பம்: கணவன் மனைவி ஒற்றுமை பலப்படும். பெரியவர்கள் ஆதரவு காட்டுவார்கள். பிள்ளைகள் நலம் பெறுவார்கள். பொருளாதாரம்: நல்ல நிலையில் இருக்கும். கடன்கள் வசூலாகும். வீண் செலவுகள் குறையும். ஆரோக்கியம்: சளி, காய்ச்சல் முதலிய தொல்லைகள் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம்: இலாபகரமாக நடக்கும். பணியாட்கள் தீவிரமாக உழைத்து உற்பத்தி விற்பனையைப் பெருக்குவார்கள். சீசனுக்கு ஏற்ற தொழில் செய்வோர் ஏற்றம் காண்பர். பெண்கள்: சந்தோஷமாக உலா வருவார்கள். மனதில் ஏற்பட்டிருந்த குழப்பங்கள் நீங்கித் தெளிவு பிறக்கும். இளம் வயதினரின் திருமண முயற்சிகள் வெற்றிபெறும். மாணவர்: மனையியல், தாதியர், பொறியியல் துறையினர் ஏற்றம் பெறுவர்.
சாதகமான திகதிகள் :3,9,13,14,20,21,22,23,30.

### ஏப்ரல்

குடும்பம் : உறவினர் வகையில் உதவிகள் கிட்டும் பெரியவர்கள், பெற்றவர்கள் ஆதரவு காட்டுவார்கள். கணவன் மனைவி ஒற்றுமை பலம். பொருளாதாரம் : பணநிலை திருப்திகரமாக இருக்கும். கொடுக்கல் வாங்கல் சரளமாகும். வரவேண்டிய பாக்கிகள் உரிய நேரத்தில் வந்து சேரும். ஆரோக்கியம் : உடல் பலமும் நலமும் பெறும். தொழில் வியாபாரம் : சில நவீன உத்திகளைக் கடைப்பிடித்து உற்பத்தி விற்பனையைப் பெருக்கலாம். வாடிக்கையாளர்கள் அதிகரிப்புர்கள். இருப்பு வைத்திருந்த பொருட்கள் விலையேற்றம் அடைந்து இலாபம் தரும். பெண்கள்: இளம் வயதினரின் திருமண முயற்சிகள் வெற்றி பெறும். குழந்தை இல்லாத இளம் தம்பதிகள் புத்திர சந்தானம் அடைந்து மகிழவார்கள். மெக்கானிக்கல், பொறியியல் துறையினர் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.
சாதகமான திகதிகள் :5,6,10,17,18,20,22,24,27,28.

### மே

குடும்பம் :சந்தோஷமான சூழ்நிலை நிலவும். உங்களது கட்டுக்கோப்பான குடும்ப நிர்வாகத்தைப் பார்த்து அக்கம் பக்கத்தினர் ஆச்சரியம் அடைவார்கள். பொருளாதாரம்: பணவரவு தாராளமாகும். கொடுக்கல் வாங்கல் சரளமாகும். வரவேண்டிய பாக்கிகள் உரிய நேரத்தில் வந்து சேரும். ஆரோக்கியம்: தென்பும், சுறுசுறுப்பும் அதிகரிக்கும். தொழில் வியாபாரம்: நல்ல நிலையில் இருக்கும். புதிய தொழில்கள் கிளைநிறுவனங்கள் ஆகியவற்றைத் தொடங்க இது உகந்த காலமாகும். பெண்கள்: புதிய நகைகள் வாங்கி மகிழலாம். தொழில் அதிபர்கள் மேம்மையடைவார்கள். மாணவர்கள்: பொறியியல், ஆங்கிலம் வரலாறு போன்ற துறையினர் ஏற்றம் பெறுவர்.
சாதகமான திகதிகள் : 3,7,9,10,14,18,20,24,26,30.

### ஜுன்

குடும்பம் : பிள்ளைகளின் கல்வி, தொழில் உத்தயோகம் உடல் நலம் ஆகியவை நல்ல நிலையில் இருக்கும். பெற்றோர்கள்: உதவிக்கு வருவார்கள். கட்டுக்கோப்பாகக் குடும்பம் நடத்தி அடுத்தவர்களால் பாராட்டப்படுவார்கள். பொருளாதாரம் : அனாவசியச் செலவுகள் குறையும். நாலாவழிகளிலும் வருமானம் வந்து சேரும். ஆரோக்கியம் : சிறுசுகவீனம் ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம்: முன்னேற்றப் பாதையில் நடைபோடும். புதிய முயற்சிகள் வெற்றி பெறும். கிளை நிறுவனங்களைத் தொடங்கவும், தொழிலை அபிவிருத்தி செய்யவும் உகந்த காலமாகும். பெண்கள்: உடல் நலம் தேறும். குடும்பத்தினர் உங்களை அனுசரித்து நடப்பார்கள். உத்தியோகத்தர்கள் மேன்மை அடைவார்கள். மாணவர்கள்: சட்டம் போன்ற துறையினர் ஏற்றம் பெறுவர்.
சாதகமான திகதிகள் : 3,4,10,12,14,20,21,26,27,28.

### ஜுலை

குடும்பம் :குடும்பத்தில் ஒற்றுமையும் மகிழ்ச்சியும் நலவும். தன்னிலும் மேம்பட்டவர்களின் உதவி கிடைககும். கணவன் மனைவி இருவரும் ஒற்றுமையாக உழைத்து குடும்ப முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவார்கள். பொருளாதாரம்: வருமானத்திற்கு தடையில்லை. பூமியில்போடக்கூடிய பணம விருத்தியாகும். கையில் பணம் இல்லாவிட்டால் சுருட்டிப் புரட்டி சமாளித்து விடுவீர்கள். ஆரோக்கியம் : திருப்திகரமாக இருக்கும். தொழில் வியாபாரம் : முன்னேற்றப் பாதையில் நடைபோடும். பணியாளர்கள் தீவிரமாக உழைத்துத் தொழில் வியாபாரத்தை பெருக்குவார்கள். கவர்ச்சித் திட்டங்களை அறிமுகப்படுத்துங்கள். விற்பனை பல மடங்கு பெருகும். இலாபமும் கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உங்களுக்குக் குடும்பத்தில் முழு சுதந்திரம் கிடைக்கும். மாணவர்கள்: வங்கித் துறையினர் முன்னேற்றம் காண்பார்கள்.
சாதகமான திகதிகள்: 3,9,10,12,17,18,20,24,30,31.

### ஆகஸ்ட்

குடும்பம் : அமைதியாக நடக்கும். பிள்ளைகளின் உடலநலம். கல்வி, தொழில், உத்தியோகம் முதலியவை முன்னேற்றமடையும். பெரியவர்கள் உடல் நலம் தேறும். பொருளாதாரம்: வருமானத்திற்குத் தடையிலலை. இதுவரை கொடுக்காமல் போக்குக் காட்டி வந்த கடன்காரர்கள் வாங்கிய கடனைத் திருப்பித் தருவார்கள். ஆரோக்கியம்: நன்று. தொழில் வியாபாரம்: தொழிலில் நன்னம்பிக்கை வளரும். சிலருக்கு வெளிநாட்டுப் பிரயாணங்கள் கைகூடி அதன் மூலம் நவீன கருவிகள், தொழில் நுட்பங்களைப் பெற்று தொழில் வியாபாரத்தை அபிவிருத்தி செய்யலாம். பெண்கள் :வருமானம் அதிகரிக்கும். தேவையற்ற நட்பினை விலக்கவும். எதிர்பார்த்த நல்ல உத்தியோகம் கிடைக்க வாய்ப்புண்டு.
சாதகமான திகதிகள் :5,6,10,14,20,21,24,25,29.

### செப்ரெம்பர்

குடும்பம் :உறவினர் வகையில் உஷாராக இருக்கவேண்டும். கணவன் மனைவிக்குள் சம்பந்தம் இல்லாமல் சண்டை சச்சரவு ஏற்படும். எந்த முடிவையும் நிலையானதாக்க முடியாது. பெற்றோர்களுக்குள் சில பிணக்குகள் ஏற்படும். பொருளாதாரம் : பணநிலை சரளமாக இருக்காது. கொடுக்கல், வாங்கல் வில்லங்க விவகாரங்கள். சொத்து, பொருள், பணம் எல்லாவற்றிலும் சிக்கல் நீங்கும். பிணைப் பொறுப்புகளை ஏற்காமல் இருப்பது நல்லது. ஆரோக்கியம்: சோர்வு, வயிற்று வலி, பித்தம், மயக்கம் முதலிய தொல்லைகள் ஏற்படடு நீங்கும். தொழில் வியாபாரம்: மந்த நிலை அடையும். இருப்பு வைத்துள்ள பொருள் விலை ஏறாது. சில நல்ல ஒப்பந்தங்கள் கைநழுவிப் போகும். போட்டியாளர்கள் நம்மை ஓரங்கட்ட நினைப்பார்கள். பெண்கள்: அமைதியாக இருப்பது எல்லோருக்கும் நல்லது. இளம் வயதினரின் திருமண முயற்சி தடைப்படும். மாணவர்கள்: ஹோட்டல் துறையினர் தீவிர கவனம் செலுத்த வேண்டும்.
சாதகமான திகதிகள்: 2,3,4,6,7,10,16,17,23,24.

### அக்டோபர்

குடும்பம் : குறைகளையெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகச் சரிசெய்து வருவீர்கள். கணவன் மனைவ ஒற்றுமை திருப்தியாக இருக்கும். பிள்ளைகள் சொல் பேச்சை கேட்டு நடப்பார்கள். பொருளாதாரம் : வரவேண்டிய பாக்கிகளை ஒன்றுக்குப் பலமுறை நடந்தேனும் வாங்கி விடுவீர்கள். செலவினங்கள் கட்டுக்குள் இருக்கும். ஆரோக்கியம்: உடல் நலம் தேறும். சோர்வு அகலும். தொழில் வியாபாரம்: முன்னேற்றம் தரும். மந்த நிலை மாறும். போட்டியாளர்கள் அடங்கிப் போவார்கள். புதிய முயற்சிகள் விரிவாக்கத் திட்டங்கள் இந்த மாதததில வேண்டாம். பெண்கள்: குடும்பத்திலுள்ள பெரியவர்களை அனுசரித்துப் போவது நல்லது. மாணவர்கள்: மின்சாரத் துறையினர் ஏற்றம் காண்பார்கள்.
சாதகமான த'க திகள் : 1,7,8,14,20,21,27,28,30.

### நவம்பர்

குடும்பம் :குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவார்கள். குடும்பத்தில் அமைதியும். சந்தோஷமும் நிலவும். பொருளாதாரம்: திட்டமிட்டபடி எல்லாக் காரியங்களும் நடந்து பணவரவைக் கொடுக்கும். பலவகையிலும் வருமானம் கிடைப்பதால் அதைப் பூமி முதலியவற்றில் முதலீடு செய்யலாம். வங்கி இருப்பு உயரும். ஆரோக்கியம் : பாதிப்பு எதுவுமில்லை. தொழில் வியாபாரம்: அபிவிருத்தியடையும். இலாப வரவுகள் அதிகரிக்கும். புதிய முதலீடுகளைச் செய்ய இது உகந்த காலமாகும். கூட்டுத் தொழில் சிறப்படையும். அரசு வழி ஆதரவு கிட்டும். வங்கிக் கடன் முதலியவை கிடைக்கும். பெண்கள்: அக்கம் பக்கத்தினர் பாராட்டுமளவிற்கு உங்களது நடவடிக்கை இருக்கும். குடும்பத்தினர் உங்கள் சொல்லுக்கு மதிப்பளிப்பார்கள். மாணவர்கள்: மருத்துவத்துறையினர் ஏற்றம் பெறுவர்.
சாதகமான திகதிகள் : 4,6,10,11,16,17,24,27,28.

### டிசம்பர்

குடுமபம் : கணவன் மனைவி ஒற்றுமையாக நடந்து குடும்ப முன்னேற்றத்திற்காகப் பாடுபடுவார்கள். பெரியவர்களின் உதவியும் ஆதாயமும் கிட்டும். அமைதியும் சந்தோஷமும் நிலவும். பொருளாதாரம்: வரவேண்டிய பணம் உரிய காலததில் வந்து சேரும். சேர்ந்த பணத்தை வங்கி முதலியவற்றில் முதலீடு செய்யலாம். ஆரோக்கியம் : சளி, காய்ச்சல் முதலியன ஏற்பட்டு நீங்கும். தொழில் வியாபாரம்: சக்கைப் போடு போடும். சீசனுக்கேற்ற தொழில் செய்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். வாடிக்கையாளர்கள் அதிகாப்பார்கள். பெண்கள்: விரும்பிய பொருட்களை வாங்கி மகிழலாம். இளம் வயதினரின் திருமண முயற்சி வெற்றி பெறும். மாணவர்கள்: ஹோட்டல் அதிகாரிகள், கணக்காளர் துறையினர் ஏற்றம் பெறுவர்.
சாதகமான த'கத'கள் :2,6,7,14,19,21,22,25,28,30.

(தொடரும் ....)

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் தரும் விஞ்ஞானத் துளிகள்

## வடபுலத்தில் "லீஸ்மனியாசிஸ்" தீவிரமடையுமா?

ஏ.கஜதீபன்
விலங்கியல்துறை சிறப்பு மாணவன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(தொடர்ச்சி...)

**நோய்**த்தொற்று ஏற்படுவது பிரதான நோயக்காவிகளான 'மணல் ஈ'க்களின் தாக்கத்தினாலேயே என்பதனால் அவற்றைக் கட்டுப்படுத்துவதனால் அல்லது அவற்றின் தாக்கத்திலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதனால் மாத்திரமே நோயின் தாக்கததிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம்.



'மணல் ஈ' பொதுவாக வெப்பமான ஈரப்பதன் கூடிய பிரதேசங்களிலேயே பெருக்கமடைகின்றது. **5mm** இலும் சிறிய .பருமன் கொண்ட இப்பூச்சி பொதுவாக 'தத்தி' இடம் பெயர்கின்றது. இதன் பெருக்கம் வடபகுதியில் பொதுவாக உணரப்படுகினறது. அண்மையில் யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் நடாத்திய விஞ்ஞானக் கண்காட்சியில் மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்பட்ட நோய் பற்றிய விழிப்புணர்வு காரணமாக மக்கள் வழங்கிய தகவலை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் முல்லைத்தீவுப் பகுதியில் மணல் ஈ பெருக்கமடைவது அடையாளப்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் இதன் தாக்கம் குறிப்பிட்ட காலப்பகுதியல் உயர்வாக இருப்பதாகவும் அப்பகுதி மக்களினால் உணரப்படுகின்றது.

இதுதவிர, ஏற்கனவே யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவுப் பகுதியில் 'மணல் ஈ'அடையாளப்படுத்தபபட்டுளளது. ஆனால் இந் நோய்க்காரணியான **Leishmania** இருப்பது கண்டறியப்படவில்லை.

இவைதவிர வேறு பகுதிகளிலும் காவிகள் காணப்படுவதாக நம்பப்படுகின்றது. ஆனால் அவை இன்னமும் ஆய்வுகள் மூலம் உறுதிப்படுத்தப்படவில்லை.

எனவே காவியின் தாக்கத்திலிருந்து நம்மைப் பாதுகாத்துக்கொள்வதற்கு கிருமிநாசினி சேர்க்கப்பட்ட நுளம்புவலைகள், நுளம்புத்திரிகள், அல்லது புகையூட்டல் போன்ற தடுப்பு முறைகளை மேற்கொள்ள முடியும்.

இவற்றிற்கும் மேலாக காவிகளின் பெருக்கத்தையும் கட்டுப்படுத்தலாம். இதற்காக 1994ஆம் ஆண்டு இந்தியாவிலே மிகவும் மலிவானதும், வினைத்திறன் மிக்கதுமான ஓர் முறை பயன்படுத்தப்பட்டது. இதற்கமைய வீடுகளிலும், வெளிக்கட்டடங்களிலும் சுவரில் சேறு **(Mud)** மற்றும் சுண்ணாம்பு **(Lime)** கொண்ட கலவை பூசப்பட்டது.

இதன்போது காவிப்பூச்சிகள் சேற்றினால் கவரப்பட அவற்றின் குடம்பிகள் சுண்ணாம்பினால் அழிக்கப்பட்டன. இதன்மூலமாக மணல் ஈக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ 90% இனால் குறைக்கப்பட்டது.

எனவே எமது நாட்டிலும் குறிப்பாக வடபகுதியிலும் காணப்படுகின்ற இந்நோய் தீவிரமடையுமா? பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்துமா? என்பவைதான் அடுத்து எழுகின்ற வினாக்களாகும்.

எனவே, ஒவ்வொரு பிரஜையும் தற்காப்புமுறைகளை மேற்கொள்வதன் மூலமாகவோ, அல்லது தகுந்த சிகிச்சையை மேற்கொள்வதன் மூலமாகவோ அல்லது காவிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமாகவோ தன்னையும் மற்றவர்களையும் பாதுகாத்துக்கொள்ளவேண்டும்.

சில சமயங்களில் தீவிரமடையலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற இந் நோயானது முற்றாக இல்லாமல் போய்விடவும் சந்தர்ப்பமுண்டு!

எனவே நோயின் தாக்கத்தையும், தீவிரத்தையும் உணர்ந்து நாம் ஒவ்வொருவரும் எம்மையும் எம் சுற்றத்தையும் பாதுகாக்க திடசங்கற்பம் பூணுவோமாக.

(முற்றும்)

---

# எண்களால்

## உடல் எண் 5 உயிர் எண் 9

5, 14, 23 போன்ற திகதிகளில் பிறந்து திகதி, மாதம் வருடம் இம் மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 9 வருமேயானால் இவர்கள் புதன், செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்குக் கம்பீரமாகவும், பல மக்களுக்கு தலைவனாகவும் விளங்குவர். இவர்களைப் பார்க்கின்றபோதே பிறர் அஞ்சும் அளவிறதுக் காட்சியளிப்பர்.

மனத்திடமும், உடல் பலமும் கொண்ட இவர்கள் தான் நினைத்ததைச் செய்துமுடிக்க வேண்டுமெனறு உறுதியாகச் செயல்படுவர். தன்னை நம்பி உள்ளவர்க்குத் தலைவனாகவும், தன்னை எதிர்ப்பவர்க்குப் பலமான எதிரியாகவும் விளங்குவர். எந்தக் காரியததையும் என்னால் செய்துமுடிக்க முடியும் என்று மார்தட்டிக் கூறுவர். இதனால் இவர்களை எல்லோரும் மதிப்போடு மனத்திடமான மனிதர் என அழைப்பர்.

இவர்களுடைய பிறந்த திகதி, எண்களுக்கும் பொருத்தமானதாகப் பெயர் அமைந்துவிட்டால் வாழ்க்கையில் பல்வேறு வழிகளில் முன்னேற்றம் அடைவர். பல மக்களுக்கு உதவுவதன் மூலம் தான் ஒரு பெரிய மனிதன் என்ற ஸ்தானத்தை அடைவர். எக்காரியத்தில் இறங்கினாலும் அதில் இரகசியமான வருவாயைத் தேடிக்கொண்டே செல்வர். பலருடைய பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதாலும், குறுக்கு விசாரணை செய்வதாலும் வழக்குத் தொடுப்பதாலும் புகழடைவர். ஒரு சாரார் இவாகளைப் பார்த்து சூழ்ச்சிக்காரர் என்றும், மற்றொரு சாரார் பொதுமக்களின் உபகாரி என்றும் அழைப்பர்.

இவர்களின் வாழ்க்கை போராட்டத்திலேயே உயர்ந்துகொண்டு செல்லும். பல ஆபத்துக்களைக் கடந்துகொண்டே செல்வர். பரோபகாரமான செயல்களினால் மற்றவர்கள் இவர்களை அனுபவசாலி எனப் புகழ்வர். வஞ்சகர்களும், ஏமாற்றுக்காரர்களும், நல்லவர்களும், பெரும் தொழில் அதிபர்களும், இவர்களைச் சூழ்ந்திருப்பர்.

இவர்கள் எப்போதும் சிந்தனை செய்துகொண்டேயிருப்பர். இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமையுமேயானால் நாளுக்கு நாள் முன்னேற்றம் அடைந்துகொண்டே செல்வர். வீடு, வாகனம், நிலம் போன்ற அனைத்து வசதிகளும் பெற்றுச் செல்வச் சீமானாக வாழ்வர். ஆனால் பெயர் பொருத்தமின்றி அமையுமேயானால் பல்வேறு பிரச்சினைகளைச் சுமந்துகொண்டு அலைந்து திரிவர்.

இவர்கள் மனம் சட்டம், சாஸ்திரம், கைநுணுக்கத், தொழில், சங்கீதம் போன்றவற்றை ஆராயும். அதோடு இரசாயனம், வைத்தியம் போன்றவற்றில் ஆர்வம் இருக்கும். திடீர் திடீரென்று புதுப்புதுக் கருத்துக்கள் மனதில் தோன்றும். ஆரம்ப வாழ்க்கை சிலருக்குச் சிரமமாக இருந்தாலும் வயது ஏற ஏற நல்ல முன்னேற்றத்தையும் அனுபவத்தையும்பெறுவர். எப்போதும் சுறுசுறுப்புடன் காட்சியளிக்கும் இவர்கள் சில நேரங்களில் முழுச் சோம்பேறியாகிவிடுவர். பிறருக்கு ஊக்கம் கொடுப்பதில் கைதேர்ந்தவர்களான இவர்கள் தனக்கு வரும் கஷ்டத்தைப் பிறரிடம் கூறாது தானாகவே தைரியப்படுத்திக்கொள்வர்.

கமிஷன் மூலம் அதிகப் பொருளீட்டும் பாக்கியமுள்ளவர்களா கையால் செலவு செய்யும்போது தாராளமாகச் செலவு செய்வர். பணம் இல்லாதபோது தனிமையிலிருந்து வருந்துவர். இவர்களுக்குப் பெயர் பொருத்தமானதாக அமையுமேயானால் எல்லா வளங்களையும் பெறுவதோடு, ஆண்டவனின் அருளும் கிடைக்கும்.

ஆனால் பெயர் பொருத்தமின்றி அமையுமேயானால் இயற்கையிலேயே பெண்ணாசை கொண்ட இவர்கள் காமுகர்களாக மாறிவிடுவர். இதனால் பெயரைத் தனது பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக்கொள்வது அவசியம்.

## ஏற்றமிகு வாழ்வு

**தொழில்:-** இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு கமிஷன், காண்ட்ராக்ட், ஏஜென்சீஸ், வழக்கு தீர்த்துவைத்தல் போன்றவற்றிலும், இரும்பு, மருந்து சம்பந்தமான தொழிலாலும், பிறரை மகிழ்விக்கும் தொழிலாலும் முன்னேற்றம் காண்பர்.

Dr.ஆர்.துரைமுருகர்

**நோய்:-** இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு ரத்தக் கொதிப்பு, இருதய வியாதி, சர்க்கரை வியாதி. மூட்டுவலி, முதுகுவலி, நரம்பு சம்பந்தமான நோய்கள் வர வாய்ப்பிருப்பதால் தனது பெயரைப் பிறந்த திகதிக்குப் பொருத்தமானதாக அமைத்துக்கொண்டு நோயிலிருந்து விடுபடலாம்.

**பெயர் அமைக்கும் முறை:-** புதன், செவ்வாய் ஆதிக்கம் கொண்ட இவர்களுக்குப் புதன், செவ்வாய் ஆதிக்கமான 14,23,32,41,50,59,77, 27,36,45 போன்ற எண்களில் பெயர் அமைத்துக்கொள்வது சிறப்பாகும்.

**பின்பற்ற வேண்டியவை:-**

| | |
|---|---|
| யோகமான எண் | – 5, 9 |
| யோகமான திகதிகள் | – 5,14,23, 9,18,27, 6,15,24, 3,12,21,30 |
| யேகமான நிறம் | – சிவப்பு, சாம்பல் நிறம் |
| யோகமான மோதிரக்கல் | – வைரம், ஜிர்கான், பவளம் |
| ஆகாத திகதிகள் | – 2,11,20,29,7,16,25 |
| ஆகாத நிறம் | – பச்சை மட்டும் |

(தொடரும்...)

# இளைய மடாதிபதி விஜயேந்திரர் கைது செய்யப்பட்டது ஏன்?

(சென்னை)

சங்கரராமன் கொலைவழக்கில் காஞ்சி இளைய மடாதிபதி விஜயேந்திரர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

அவர் இந்த வழக்கில் 25வது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

அவர் மீது இந்திய தண்டனைச் சட்டம், 302(கொலை), 34, 120பி (சதித திட்டம் தீட்டுதல்) ஆகிய 3 பிரிவுகளில் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு மாஜிஸ்திரேட் முன்பு ஆஜர்படுத்தப்பட்ட விஜயேந்திரர் 1௳ மணிக்கு சென்னை அழைத்துவரப்பட்டு மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். அவரை பிணையில் எடுக்க சங்கரமட வக்கீல்கள் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.


ஜெயேந்திரரை விடுதலை செய்ய வருமாறு:-

சங்கரராமன் "கடைசி எச்சரிக்கை" என்று கடிதம் எழுதியதால் கோபம் அடைந்த ஜெயேந்திரர் அப்புவை அழைத்து அவரை முடித்துவிடு என்றார். இதற்காக 50 லட்சம் தருவதாகவும் கூறினார்.

ஜெயேந்திரரின் உத்தரவுப்படி நான் (ரவிசுப்பிரமணியம்) அப்பு இருவரும் இளைய மடாதிபதி விஜயேநதிரரைச் சந்தித்தோம். அப்போது அங்கு விஜயேந்திரரின் சகோதரர் ரகுவும் இருந்தார்.

ஜெயேந்திரர் எடுத்த முடிவு பற்றி விஜயேந்திரரிடம் நாங்கள் சொன்னோம். உடனே ரூபா 50 லட்சம் பணம் கொடுக்க ஏற்பாடு செய்யுமாறு ரகுவிடம் விஜயேந்திரர் கூறினார். எனவே கொலைத்திட்டம் பற்றி விஜயேந்திரருக்குத் தெரியும்.





மேல் நீதிமன்றம் உத்தரவிட்ட சில மணி நேரங்களுக்குள் விஜயேந்திரர் கைதுசெய்யபபட்டது சங்கரமட ஊழியர்களை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

விஜயேந்திரரை கைது செய்ததற்கு நாடெங்கும் உள்ள இந்து அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

விஜயேந்திரர் கைதுசெய்யப்பட்டதற்குக் காரணம் என்ன என்பது பற்றி பொலிஸாரிடம் விசாரித்தபோது பல புதிய தகவல்கள் கிடைத்தன. சங்கரராமன் கொலை வழக்கில முககிய குற்றவாளிகளாகக் கருதப்படும் அப்பு, ரவி சுப்பிரமணியம் இருவரும் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில்தான் விஜயேந்திரர் கைதாகி இருப்பதாகக் கூறினார்கள்.

குறிப்பாக ரவி சுப்பிரமணியம் வாக்குமூலம்தான் விஜயேந்திரரை சிக்கவைத்ததாகப் பொலிஸார் கூறுகின்றனர். சங்கரராமனை கொலை செய்யப்போவதும், பணம் கைமாறியதும் எல்லாம் விஜயேந்திரருக்குத் தெரியும் என்று ரவி சுப்பிரமணியம் வாக்குமூலத்தில் கூறியுள்ளார்.

அந்த வாக்குமூலத்தின் விபரம் இவ்வாறு ரவி சுப்பிரமணியம் தன் வாக்குமூலத்தில் கூறியுள்ளார். எனவே சங்கரராமன் கொலை சதித்திட்டத்தில் விஜயேந்திரருக்கும் பங்கு இருப்பதாக பொலிஸார் முடிவுக்கு வந்துள்ளனர்.

ரவி சுப்பிரமணியத்தின் வாக்குமூலம் தவிர அப்பு கொடுத்த வாக்குமூலத்தையும் விஜயேந்திரருக்கு எதிராகப் பொலிஸார் காட்டுகிறார்கள்.

அதற்குத் தேவையான ஆதாரங்களையும் பொலிஸார் திரட்டி உள்ளனர்.

கதிரவன், பாண்டியன் என்ற தில பாண்டி ஆகியோரது வாக்குமூலத்தையும் பொலிஸார் இந்த வழக்கில வலுவான ஆதாரங்களாகக் காட்டுகின்றனர். ஆனால் பொலிஸார் தன் மது கூறும் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் 100 சதவீதம் பொய்யானவை என்று இளைய மடாதிபதி விஜயேந்திரர் தெரிவித்துள்ளார்.

விஜயேந்திரரிடம் தனிப்படை பொலிஸார் இதுவரை 2 தடவை அழைப்புக்கட்டளை அனுப்பி காட்டு பங்களாவுக்கு வரவழைத்து விசாரணை நடத்தியுள்ளனர். அந்த விசாரணைகளில் பயனுள்ள தகவல் கள் எதுவும் கிடைக்கவில்லை.

எனவே விஜயேந்திரரை பொலிஸ காவலில் வைத்து மீண்டும் விசாரிக்க தனிப்படை பொலிஸார் முடிவு செய்துள்ளனர்.

இதற்கு அனுமதி கேட்டு காஞ்சிபுரம் நீதிமன்றில் பொலிஸார் இன்னும் ஓரிரு நாட்களில் மனுத் தாக்கல் செய்யவுள்ளனர்.

ஒருவாரம் விஜயேந்திரரை பொலிஸ காவலில் விசாரிக்க தனிப்படை பொலிஸார் அனுமதி கோருவார்கள் என்று கூறப்படுகிறது. (க)

## பற்றுச்சீட்டை பெற்றுக்கொள்க!

(யாழ்ப்பாணம்)

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்கவென யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தால், மக்கள் வங்கி யாழ்ப்பாணம் பல்கலைக்கழகக் கிளையில் ஆரம்பிக்கப்பட்ட "N.D.R.F.-26.12.2004" பெயருடைய 60204 இலக்க முடைய நடைமுறைக் கணக்குக்குப் பலர் பணவைப்புச் செய்துவருகின்றனர்.

இவர்கள் தமது வங்கி வைப்புப பற்றுச் சீட்டை பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையில் நேரடியாகவோ, தபால் மூலமோ கிடைக்கச் செய்து தங்கள் நன்கொடைக்குரிய பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம் என நலச்சேவைகள் கிளையின் உதவிப் பதிவாளர் அறிவித்துள்ளார். (க)

## சிப்பாய் தற்கொலை

செட்டிப்பாளையம் விசேட அதிரடிப்படை முகாமைச் சேர்ந்த சிப்பாய ஒருவர் தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துள்ளார். இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது.

காதல் விவகாரம் ஒன்றின் காரணமாகவே இவர் தற்கொலை செய்து கொண்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவரது சடலம் களுவாஞ்சிக்குடி மாவட்ட வைத்தியசாலைக்குப் பிரேத பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டு வைக்கப்பட்டுள்ளது. (ப)

# உதவிகளை சமமாக பகிர்ந்தளிப்பதை மாகாண ஆளுநர் உறுதி செய்ய வேண்டும்

### இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் கடிதம்

(யாழ்ப்பாணம்)

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில மக்களால் தெரிவுசெய்யப்பட்ட சபைகள் எதுவும் இல்லாததால், ஆளுநர் என்ற முறையில் தாங்கள் முழுப பொறுப்பேற்று இலங்கை அரசு, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்கள், ஐ.நா.முகவர்கள் கிடைக்கும் உதவிகளைச் சமமாகப் பங்கிடுவதை உறுதிசெய்யவேண்டுமெனக் கேட்டுக கொள்கிறோம்"

இவ்வாறு வட கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோவுக்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் சமர்ப்பித்த கடிதமொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'சமமாக என நாங்கள் குறிப்பிடுவது 50சதவீதத்தை அல்ல; 70 வீதமான உதவிகள் வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கு வரவேண்டுமென்பதே எமது கணிப்பாகும்.

70வீதமான இறப்பு, 70 வீதமான காணாமற்போனோர், சுனாமியால் ஏற்பட்ட 70வீதமான அழிவு என்பதே எமது கணிப்பாகும்.

அத்துடன், இலங்கையின் மூன்றில் இரண்டு பங்கு கடற்கரைப் பிரதேசம வட,கிழக்கு மாகாணங்களிலேயே இருக்கிறது என்பதையும் குறிப்பிட விரும்புகிறோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளே வடக்குக் கிழக்கு மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதற்கு அப்பகுதி மக்கள் ஏற்கெனவே ஆணை வழங்கியுள்ளார்கள். எனவே, மொத்த உதவிகள், புனரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியேற்றப பணிகள் ஆகியன தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசனையுடனேயே நடத்தப்படவேண்டும்' என அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (து)

## விபரம் சேகரிக்கும் பணி துரிதம்!

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களைப் பல்வேறு வகையில் இனம்காணும் பணி பல்கலைக்கழக மாணவர்களாலும், விடுதலைப்புலிகளாலும் வாகரை தொடக்கம் துறைநீலாவணை வரையுமான பிரதேசங்களில் தற்போது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ.ரவீந்திரநாத் தெரிவித்துள்ளார்.

கடந்த 5ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்ட பணியின்போது இறந்தவர்கள், உ ா மை சேதம், பாதிக்கப்பட்ட தன்மை, காணாமல் போனோர் உட்பட பல்வேறுதரப்பட்ட விடயங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றது.

இப்பணி முழுமையாக இம்மாதம் 20ஆம் திகதிக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பணி முடிவுற்றதும் நீலாவணை தொடக்கம் பாணமை வரையிலான மதிப்பீட்டுப் பணி தொடரும் எனவும் அறிவிக்கப்படுகின்றது. (ப)

# அழிவுகளுக்குப் பின்னும் இரங்காத அரசின் மனநிலை தமிழ்மக்களுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது

### யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச்சங்க சமாசம் ஆளுநருக்கு மகஜர்!

(யாழ்ப்பாணம்)

***சுனாமிப் பேரலை வடக்கு - கிழக்கு கரையோரங்களைத் தாக்கி அழித்ததைவிட மிக மோசமான பாதிப்பை அரசு தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ்மக்களின் அபிலாசைகளைப் புறந்தள்ளிவிட்டு தாங்கள் இங்கு வருவது எவ்வித பயனையும் தராது.***

யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிச் சங்கத்தின் சமாசத்தால் மாகாண ஆளுநரிடம் கையளிக்கப்பட்டுளள மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசுக்கும் புலிகள் அமைப்பிற்கும் போர்நிறுத்தம் ஏற்பட்டு புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படடு இன்றுவரை உருப்படியான செயல்பாட்டை அரசு மேற்கொள்ளவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதால் தமிழ் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். தாங்கள் சொந்த இடங்களுக்குச் சென்று இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பலாம் என்று எண்ணினார்கள். ஆனால் நடந்தது ஒன்றுமில்லை. எல்லாம் இன்று தவிடு பொடியாகிவிட்டது. மக்கள் வாழ்வில் இருள் சூழ்ந்துள்ளது.

முப்பது வருடகால போரினால் அரசு எவ்வித படிப்பினையும் கற்றுக் கொள்ளவில்லை. இதனால் ஏற்படப்போகும் பாரிய எதிர்விளைவுகளை இந்நாடு சந்திக்கப்போகிறது என்பதை அரசு ஏன் புரிந்துகொள்ள மறுக்கிறது.

சுனாமி பேரலை வடக்கு கிழக்கு கரையோரங்களைத் தாக்கி அழித்திருக்கிறது. தமிழீழ விடுதலைப்புலிகள் விடுத்திருந்த கோரிக்கைகளை ஏற்று சர்வதேச சமூகம் அதிகளவு நிதி உதவி அளித்திருக்கிறது. ஆனால் இவ்வுதவிகள் தமிழ் பிரதேசங்களை வந்துசேரவில்லை. இது கண்டனத்துக்குரியது.

இவ்வளவு அழிவுக்குப் பின்னரும் அரசு மனிதாபிமானமற்ற வகையில் செயல்படுவது தமிழ் மக்களை ஆத்திரம் கொள்ள வைக்கிறது. இந்தப் பாகுபாடு எப்போதும் இலங்கை அரசின் உச்சத்தில் இருப்பது அது இப்போதும் நிருபிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் கொபி அனான் வடக்கு வருவதை தடுத்திருப்பது இதற்குச் சான்று பகிர்கிறது. இச்செயலானது ஐ.நா. சாசன விதிமுறைகளை மீறுவதாகும்.

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பகுதி நிலவரங்களை நேரில் பார்வையிட விரும்பிய செயலாளர் நாயகம் அனானை வரவிடாமல் தடுத்தது ஒரு பாரதூரமான விடயமாகும். இது இனவிரோதக் கொள்கையின் உச்சநிலையாகும்.

யுத்தமில்லை, சமாதானமுமில்லை. சுனாமி பேரலை உதவியுமில்லை என்ற நிலையில் தமிழர்கள் உள்ளனர்.

எனவே தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிடம் இடைக்கால நிர்வாக அலகை வழங்குவதன் மூலம் தமிழ்மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்ப முடியும் என்பதே யதார்த்தமாகும். இதனைச் செய்யாமல் எந்தவொரு அரசுப் பிரதிநிதியும் இங்கு வந்து எந்தப் பயனும் ஏற்படாது என்பதை திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம் என்றும் அம்மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# துயரம் தந்த 2004 டிசம்பர்

01.12.2004 * நோர்வேயின் விஷேட தூதுவர் எரிக் சொல் ஹெய்ம் லண்டனில் அன்ரன் பாலசிங்கத்துடன் சந்திப்பு.



02.12.2004 * நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் கிளிநொச்சி விஜயம். சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.



* வவுனியா, மன்னாரில் ஹர்த்தால் அனுஷ்டிப்பு.

03.12.2004 * நேர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் - ஜயந்த தனபால சந்திப்பு.

04.12.2004 * தமிழக விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் பொதுச்செயலாளர் திருமாவளவன் நாடாளுமன்றம் வருகை. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் அங்கு அவருக்குப் பொன்னாடை போர்த்தி அமோக வரவேற்பளித்தனர்.

07.12.2004 * நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு 2 வருட கடுழியச் சிறைத்தண்டனை விதிப்பு.


08.12.2004 * நாடாளுமன்றில் ஐ.தே.க அட்டகாசம்.



10.12.2004 * மூதறிஞர் சொக்கன் காலமானார்.

11.12.2004 * கொழும்பு குதிரைப்பந்தயத் திடலில் நடைபெற்ற தென்னிந்தியத் திரைப்பட நட்சத்திரங்கள் பங்குபற்றிய களியாட்ட நிகழ்வில் குண்டுவெடிப்பு.





15.12.2004 * எரிக் சொல்ஹெய்ம் கிளிநொச்சி பயணம். சு.ப.தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு.

## வலம்புரி நினைவுக்குறிப்பு

20.12.2004 * சாவகச்சேரியில் மனிதச்சங்கிலிப் போராட்டம்.

21.12.2004 * எஸ்.பி.யை விடுதலைசெய்யக் கோரி கொழும்பில் ஐக்கிய தேசியக்கட்சி மாபெரும் ஆர்ப்பாட்டம்.

22.12.2004 * கைதடியில் மனிதச்சங்கிலிப் போராட்டம்.
* ஜனாதிபதி சந்திரிகா லண்டன் பயணம்.





23.12.2004 * யுனிசெவ் பிரதிநிதிகள், விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பிரதிநிதிகளுடன் கிளிநொச்சியில் சந்திப்பு.





24.12.2004 * கொடிகாமத்தில் மனிதச்சங்கிலிப் போராட்டம்.

26.12.2004 * வடக்கு, கிழக்கில் சுனாமி கடற்பெருக்குக் காரணமாக 30 ஆயிரத்து 229 பேர் பலி.



* இதில்

| | |
|---|---|
| அம்பாறை | 10, 436பேரும் |
| அம்பாந்தோட்டை | 4, 500பேரும் |
| காலி | 4, 141பேரும் |
| யாழ்ப்பாணம் | 2, 640பேரும் |
| மட்டக்களப்பு | 2, 497பேரும் |
| முல்லைத்தீவு | 3, 000பேரும் |

அடங்குவர்.





* 150,683 பேர் காயமடைந்துள்ளனர்.

* 2 லட்சத்து 12 ஆயிரத்து 800 குடும்பங்கள் இடம் பெயர்வு.

29.12.2004 * மகிந்த ராஜபக்ஷ, டி.யூ.குணசேகர யாழ். வருகை.



* ஜே.வி.பியின் வருகையை எதிர்த்து யாழ்.செயலகம் முன்பு மறியல்போராட்டம்.

31.12.2004 * சுனாமியால் உயிரிழந்தோருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இலங்கையில் தேசிய துக்கதினம் அனுஷ்டிப்பு.

## உலக அரங்கில்

10.12.2004 * பலகோடி மரங்களை நாட்டி பசுமைப்புரட்சி ஏற்படுத்திய கென்ய நாட்டின் பெண்மணி வங்காரி மாத்தாய்க்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது.



* இசைப்பேரரசி எம்.எஸ். சுப்புலட்சுமி காலமானார்.



23.12.2004 * இந்திய முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் காலமானார்.

# மீள் பார்வை

# யாழ்ப்பாணத் தமிழரசர் வரலாறும் காலமும்

வேலணை பண்டிதர் பொ.ஜெகந்நாதன் 35

## 28. நல்லூர் இராசபரம்பரை

தலைநகர் வரலாற்றில் கனனசூரிய சிங்கையாரியன் கி.பி.1450ஆம் ஆண்டளவில் அரசு புரிந்தானாக. அக்காலையில் கோட்டை அரசனாகிய செண்பகப் பெருமாள் படைஎடுத்துவந்து அவனை வென்று கொண்டானாக. தோல்வி கொண்ட கனகசூரியன் இந்தியாவுக்கு ஓடிப்போக செண்பகப்பெருமாள் அந்நகரில் இருந்தரசு புரியும் நாளில் கோட்டை இராச்சியத்தைப் பெற்று அவன் முடிசூடும் நோக்கமாக அந் நல்லூரில் விஜயவாகு என்பவனை நியமித்து அரசாட்சி செய்யும்படி வைத்துச் சென்றனாக அப்பால் தோற்றோடிப்போன கனகசூரியனும் பிள்ளைகளும் 1467ஆம் ஆண்டில் நல்லூருக்குப் படைஎடுத்து வநது விஜயவாகுவைக்கொன்று அத் தலைநகரில் ஆட்சிபுரிந்தார்களென்றும் கண்டாம் இனிமேல் கனகசூரியனுக்கு முன்னும் பின்னும் அத் தலைநகர் வரலாறு அறிதல் வேண்டும் ஈண்டு அவனுக்கு முன்னுள்ள வரலாற்றை அறிவோம். கனகசூரியன் இருந்த தலைநகரம் யாது அது அவனுக்குத் தந்தையால் முடிசூட்டப்பட்டது இப்படியே தந்தை ஆள்வதும் மகனுக்கு முடிசூட்டுவதுமாக ஆதி அரசன் சிங்கை ஆரியன் வரைதந்தை முன்தந்தையாக கி.பி.948ஆம் வரை போயிருக்கும் எனவே ஆதீச் சிங்கை ஆரியனில் இருந்து கனக சூரியன் வரை ஆட்டவணைப் படுத்தினால்.

1. ஆதிச்சிங்கையாரியன் கி.பி-948
2. குலசேகரசிங்கையாரியன்
3. குலோத்துங்க சிங்கையாரியன்
4. விக்கிரம சிங்கையாரியன்
5. வரோதய சிங்கையாரியன்
6. மார்த்தாண்ட சிங்கையாரியன்
7. குணபூஷணசிங்கையாரியன்
8. விரோதய சிங்கையாரியன்
9. சயவீரசிங்கையாரியன்
10. குணவீரசிங்கையாரியன்
11. கனகசூரிய சிங்கையாரியன் கி.பி. 1440 -1450

இவ்வளவு அரசர்களும் நல்லூரிலே செண்பகப் பெருமாள் படைஎடுப்புவரையும் அரசாண்ட அரசர்கள் பிறர் கலிங்க மாகனையே முதல் அரசனாக வைத்து அவன பரம்பரைதான் குலசேகரன் முதலான அரசர்கள் என்று அட்டவணைப்படுத்தியிருக்கிறார்களா. இந்நூலிலே ஆதிச்சிங்கை ஆரியன் பாண்டிமழவன் கூட்டிவந்த சோழ இராஜ குமாரன்தான் முதல் அரசன் என்று நன்கு விளக்கப்பட்டிருக்கிறது.

11ஆவது அரசன் கனகசூரியன் கி.பி.1440ஆம் ஆண்டில் அரசை ஆரம்பித்தான். ஆனால் 948 தொடங்கி 1440வரையும் 10 அரசர் ஆண்டார்கள். ஆகையால் அவர்கள் ஆட்சிக்காலம் 948 தொடங்கி 1400 வரையும் 492ஆண்டுகளாகும். அதனை 10தாலே பிரித்தால் ஒருவனுகது 49ஆண்டு வரை ஆகிறது செகராசசேகரமாலை ஆராய்ச்சியால் 4 மன்னர்கள் பெயர்கள் வெளியாகவில்லை. என்று அறியப்படலால் அதனை 14ஆல் பிரித்தால் 35ஆண்டுகள் ஆகின்றன. இது ஒருவரின் ஆட்சிக் காலச் சராசரிக் கணக்காகும்? இக்கணக்கே சரி. நிற்க பிறர் சிங்கை ஆரியன பரம்பரையைக் கலிங்க மாகன் பரம்பரையாகப் பிழையாக எழுதிவிட்டார்கள். அதனாலேயே ஆட்சிக்காலத்தை 300 ஆண்டுகள் பின்னுக்கு வைக்கிறார்கள். இங்கே சிலகை ஆரியன் பரம் பரையாகக் காட்டப்பட்டிருக்கிறது. இவர்கள் ஆட்சிக்காலம் முன்னர் தனித்தனியாக வெளியாகவில்லை.

செண்பகப் பெருமாள் (சிங்கள அரசன்) கி.பி.1450-1467
பரராச சேகரன் கி.பி. 1467-1519
சங்கிலி கி.பி. 1519-1561

இவ்வளவு அரசரும் போர்த்துக்கேயர் படை எடுப்புக்கு முன் சுதந்திரமாய் வாழ்ந்த அரசர்கள். இவ்வட்டவணை. (யா.வை.வி.பக். 109-110)

காசிநயினார்
பெரியபிள்ளை
புவிராசபண்டாரம்
எதிர்மன்னசிங்கம் 1591-1616
சங்கிலி குமரன் கி.பி. 1616-1620

என்னை இச் செ.இ.காரர் சு.ஞானக்காரர் கலிங்கமாகன் ஒருவனை வந்ததாகப் பாவனை பண்ணி அவன் மேலே யாழ்ப்பாணத்தலைநகரை வைத்துத் தலை நகர்காலத்தை 300 ஆண்டுகள் குறைத்து விட்டிட்டார்களே. கி.பி. 10ஆம் நூற்றாண்டாரம்ப தலைநகரை பதின்மூன்றாம் நூற்றாண்டாக்கிவிட்டார்களே நிற்க கலாநிதி சி.பத்மநாதன் அவர்கள் வெளியிட்ட வன்னியர் என்னும் நூலினை யாம் பார்க்க நேர்ந்தது. அதிலே யாழ்ப்பாணத்து நல்லூரில் ஆட்சி செய்த பரராச சேகரமாகரசா சிதம்பரத்துக்குப் போய் மடம் ஒன்று கட்டி அதில சூரியமூர்த்தித் தம்பிரானை நியமித்து சிதம்பர நடேசருக்குப் பலவகைத்தான தருமங்களைச் செய்திருந்திருக்கிறான் அத்தரும சாதனங்களைப் பண்ணிய காலம் நூல் பக்.70-75 வரையில் விளங்கப்படுகின்றது..அக்காலம் செப்பேட்டில் உள்ளபடியும் திருந்திய வாசகப்படியும் சாலிவாகன சகாப்தம் தொழயிரத்து நாற்பத்துநாலு (944) ஆம் ஆண்டின் மேற்செல்லா நின்ற சுபசிருது வருடம் தைமாதம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது கொண்டும் நல்லூர்த் தலைநகர் ஆரம்பம் கி.பி.948சரி என்று தோன்றுகிறது. என்னையெனில் அது கிறிஸ்தாப்தம் 944+78=1022 ஆகிறது. அப்படியானால் அது நல்லூர்த்தலை நகரம் கட்டிய 1022-948=74 ஆணடு களுக்குப் பின் ஆனபடியால் அத்தானம் செய்தவர்கள் ஆதிச்சிங்கையாரியனின் 3வது பாட்டனாகலாம்.

## 29. தலைநகர் ஒன்று பெயர்கள் மூன்று

ஆதிச் சிங்கையாரியகுல மன்னர் பரம்பரை பரம்பரையாக போர்த்தர் படை எடுப்பில் தோல்விகாணும் வரைக்கும் அதாவது கி.பி.1620 வரைக்கும் அதன் பின்னர் அரைநூற்றாண்டுக் காலம்வரை அப்போர்த்தரின் கீழ் சிற்றரசர்களாகவும் இருந்து ஆட்சி புரிந்த தலைநகரம் ஒன்று அத்தலைநகருள்ளும் அவர் இருந்து ஆட்சிபுரிந்த களமும் ஒன்று. அதாவது அவர்கள் நல்லூரை விட்டு வேறோர் இடத்திலோ அன்றி நல்லூரில் வெவ்வேறிடங்களிலோ தலைநகர் அமைத்து ஆட்சி புரியவில்லை. ஒரே ஒரு இடத்தில் தான் இருந்து ஆட்சி புரிந்திருக்கிறார்கள். அந்த ஒரே ஒரு இடந்தான் நல்லூர். அங்கே தலைநகர் அவர்கள் அமைத்தது கி.பி.948ல் போர்த்தர் அதிகாரம் முடிந்தது கி.பி.1658வரை. எனவே சிங்கை ஆரியர் குலத்தவர் ஆட்சி நல்லூரிலே (948-1658) உத்தேசம் 710ஆண்டுவரை. இக்கால எல்லையிலே அத்தலைநகர்க்கு அதுபெற்ற வரலாறு காரணமாகவும், வெவ்வேறு சார்பு காரணமாகவும் அந் நல்லூர் நகர்க்கு, நல்லூர் நகர் என்றும் சிங்கை நகர் என்றும், யாழ்ப்பாண நகர் என்றும் பொயர்கள் வந்திருக்கின்றன.

(தொடரும்)

## அனர்த்த உணர்வுக் கருவிகளை கொள்வனவு செய்ய முயற்சி

### சிபார்சு குழு ஒன்றும் அமைப்பு

(கொழும்பு)

இராட்சத கடல் அலை மற்றும் பூமி அதிர்ச்சி போன்ற இயற்கை அழிவுகளின் அடிபபடை அறிகுறிகள் பற்றி ஆராய்ந்து தகவல் தெரிவிக்கும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கான சிபார்சுகளை செய்வதற்கான விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல்துறை அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ள இந்தக்குழுவில் சம்பந்தப்பட்ட துறை நிபுணர்கள், மற்றும் 4 பேராசிரியர்கள் உள்ளிட்ட 6 பேர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழுவின் ஆக்க புர்வமான ஆய்வு அறிக்கையை விரைவில் எதிர்பார்ப்பதாக தெரிவித்த சுற்றாடல்துறை அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி.

சுனாமி அனர்த்தம் இடம் பெறுவதற்கு முன்னர் அது தொடர்பான அடிப்படை அறிகுறிகள் விடுக்கப்படாமை குறித்து மக்கள் பலதரப்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும் அதுதொடர்பான உறுதியான திட்டம் ஒன்றை சிபார்சு செய்வதற்காகவே இந்த விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அத்துடன், அனர்த்தம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டால் அது தொடர்பாக மக்களுக்கு உடனடியாக அறிவுரை செய்வதற்கான முறைகள் பற்றி ஆராயுமாறு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.(ப-4)

## வணிகபீட மாணவர்களின் கவனத்துக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டு முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடப் பரீட்சைகள் திட்டமிட்டபடி எதிர்வரும் 17ஆம் திகதி தொடக்கம் நடைபெறும் என முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது.

(க)

## நலன் பேணும் ஆர்வலர்கள் வடமராட்சிக்கு விஜயம்

(திருநெல்வேலி)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பராளுமன்ற உறுப்பினர் ரவிராஜூம் அமெரிக்க, லண்டன் நாடுகளைச் சேர்ந்த நலன்போணும் ஆர்வலர்களும் சுனாமி அலையினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்கு மாமுனை, செம்பியன்பற்று ஆகிய இடங்களுக்கும் புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசங் களுக்கும் அண்மையில் விஜயம் செய்தனர்.

இவர்கள் சுனாமியினால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டதுடன், நலன்புரி நிலையங்களிற்கும் சென்று அம்மக்களுடன் கலந்துரையாடினார்கள்.

(க-43)

## பாதிக்கப்பட்டவர்களுக்கு நவீன வசதிகொண்ட வீடுகள்

(கல்முனை)

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் குடியிருப்புக்களை இழந்த கல்முனை காரைதீவுப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களுக்கு நவீன வசதிகளைக் கொண்ட புதிய வீட்டுத்திட்டம் அமைத்துக்கொடுக்கப்படவுள்ளது.

கரைவாகு வட்டை, மேட்டு வட்டை ஆகிய பிரதேசங்களில் இத் திட்டம் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் பேரியல் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் வீதிகளையும், பாலங்களையும் செப்பனிடுவதற்கான துரித திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதேவேளை, வடக்குக்-கிழக்கைச் சேர்ந்த வீதிகளையும் பாலங்களையும் திருத்துவதற்கு 4கோடி 50இலட்சம் ரூபா வரை செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. (7)

## பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

அண்மையில் ஏற்பட்ட கடற்பேரலைப் பாதிப்பால் பயிர்ச் செய்கைகளில் ஏற்பட்ட இழப்பீடுகளுக்கு நிவாரணம் வழங்குவதற்காக விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன.

இந் நடவடிக்கைகளை கமநல காப்புறுதிச்சபை மேற்கொண்டு வருகிறது.

அத்துடன், கடல் கடந்த நாடுகளில் வேலைசெய்யும் எண்ணத்தைக் கைவிட்டோருக்குத் தேவையான தொழில் உதவிகளை வழங்கப் போவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் தெரிவித்துள்ளன.

கடவுச் சீட்டு உட்பட ஆவணங்கள் அழிந்திருப்பின் அவற்றை மீண்டும் பெறுவதற்கும், குடியிருப்புக்களை இழந்த தொழிலாளர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதற்கும் தாம் உத்தேசித்திருப்பதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கூட்டமைப்பின் தலைவர் சுறாஜ் ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

(க-7)

## மீன் பிடித் தொழிலை கட்டியெழுப்ப இத்தாலிய அரசு உதவி வழங்கும்

(கொழும்பு)

“சுனாமி” அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் மீன்பாடித் தொழிலை கட்டியொழுப்புவதற்கான உதவிகளை இத்தாலி அரசு வழங்கும் என்று அந்த நாட்டின் தலைவர் தெரிவித்திருக்கின்றார்.

நேற்றுமுன்தினம் மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேசும்போதே இதற்கான உத்தரவாதத்தை இத்தாலி அரசு சார்பாக வழங்கியுள்ளார்.

இலங்கையின் மீன்பாடி புதிய இடத்தை நோக்கிச் செல்வதற்கு மீன்பிடிப் படகுகள், வலைகள் மற்றும் உபகரணங்களை தனது நாடு வழங்குமென்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். (க-9)

# கல்வியியல் கல்லூரிகளின் அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

(தொடர்ச்சி...)

## நடனம்

வேலாயுதபிள்ளை ரேணுகா, நெல்லியடி. மதியாபரணம் நர்மதா, நெல்லியடி வடக்கு.

## சங்கீதம்

சுவிதா நடராசா, உரும்பிராய் மேற்கு. முருகேசு கார்த்திகா, சுன்னாகம், மேற்கு. சிவானந்தராசா ஜசித்திரா, இணுவில் கிழக்கு. துரைசிங்கம் பத்மினி, கோண்டாவில் மேற்கு. செல்லத்துரை பாமிலா, இயற்றாலை, வரணி. அருசாந்தி மகாலிங்கம், கட்டைப்பிராய் தட்... மூர்த்தி பழனி, அல்லாரை தெற்கு, மீசாலை. வானதி கனகரத்தினம், கல்வயல், சாவகச்சேரி. அருமைத்துரை தனுஷியா, நீர்வேலி வடக்கு. இராசலிங்கம் பிரபு, சூராவத்தை, சுன்னாகம். மகேஸ்வரன் மாதங்கி, காரைநகர். அருந்தவச்செல்வி கதிர்வேலு, அளவெட்டி வடக்கு. அசாமரா யேசுதாசன், மானிப்பாய். உருத்திரன் ராஜாராம், தொல்புரம். கனேசன் சர்மினி, கோண்டாவில் மேற்கு. தர்சிகா பரமானந்தம், கொக்குவில் கிழக்கு. கிருஷ்ணகுமார் துஷாந்தி, சங்கானை. பொன்னம்பலம் இந்திராணி, கொடிகாமம். நிலாகினி சண்முகசுந்தரம், கொக்குவில். கிருஷ்ணபிள்ளை ஜெயகுமார், தாளையடி. திருச்செல்வம் துஷ்யந்தி, மானிப்பாய். தம்பிராஜா கணேசவேல், சித்தங்கேணி. ஸ்ரானிஸ்லோஸ் டிலோசினி, இராஜேந்திரம் ரோட். மயில்வாகனம் ஜெயரூபி, மீசாலை வடக்கு. தியாகலிங்கம் சாமிளா, காரைநகர். மரியதாஸ், நிறைஞ்சினி, மல்லாகம். சந்திரகலா இராசேந்திரம், சங்கானை.

## விசேட கல்வி

பஞ்சலிங்கம் கிரிதரன், கோப்பாய் வடக்கு. ஜெயரஞ்சினி தங்கராஜா, அல்வாய் கிழக்கு. சிவலிங்கம் தனுஷா, தெல்லிப்பழை. சிவகிருஷ்ணதேவி தாமோதரப்பிள்ளை, புத்தூர் மேற்கு. சிவபாலன் நிருஜா, ஏழாலை மேற்கு. சின்னராசா செந்துரன், சுன்னாகம் மோனகுரு மோகனா, வல்வெட்டித்துறை. விஸ்வலிங்கம் விஷ்ணுகரன், ஊரெழு கிழக்கு. தங்கராசா தர்சிகா, சங்கத்தானை. பாலசுப்பிரமணியம் கஜேந்திரன், கொழும்புத்துறை. சோமசுந்தரம் சத்தியகாந்தன், ஊர்காவற்றுறை. செல்வரத்தினம் பகீரதன், ஏழாலை. ஜெனிவிரோனா தில்லைநாயகம், மத்தியூஸ்ரோட். செல்வராசா சுசீபா, ஏழாலை மேற்கு. சிண்ணையா வசந்தி, மானிப்பாய். தர்மரத்தினம் ரஜனிகாந்த், கரணவாய் தெற்கு. சிவகணேவேல் மதுசூதனன், வல்வெட்டித்துறை. சேனாதிராசா யகீன்தன், கொட்டடி. இராசநாயகம் சுமனன். நுணாவில் குழி கிழக்கு, கைதடி. இராமச்சந்திரன் ஜெயமோகன், அல்வாய் கிழக்கு. யோகேம் நியோனிற் கிருபாகரன், சுதுமலை வடக்கு. ஜெய்பிரியா சிறிஸ்கந்தராஜா, யாழ்இந்துக்கல்லூரி ஒழுங்கை. நடராஜா சுஜீபன், கோண்டாவில் கிழக்கு. சண்முகவடிவேல் ராஜ்கிரா, அராலி மத்தி. நடராஜா நிஷாந்தினி, மட்டுவில் வடக்கு. இராசரத்தினம் திலீபன், சுன்னாகம் மேற்கு. நடேசன் சிவரூபன், தெல்லிப்பழை கிழக்கு. தனலக்ஷ்மி பாலசுப்பிரமணியம், பொலிகண்டி மேற்கு. கிருபைராசா பிரதீபா, அரியாலை. மரியதாஸ் மரோமக்ஷன், கொண்டடி ரோட்.

## கத்தோலிக்கம்

மார்யரத்தினம் சாமினி, தும்பளை ரோட். லக்மனலிங்கம் மெரிலின்ஸியா, கொழும்புத்துறை. விஜயகுலசிங்கம் ஜெஸ்லீனா, இளவாலை. ஒஸ்ரின் வத்சலா பிரான்ஸிஸ் சேவியர், கொக்குவில் கிழக்கு. சொலமன் கிறிஸ்ரின் பாமா, அல்லைப்பிட்டி. பத்திநாதன் ஆக்கிலோ பிஜின், உரும்பிராய் கிழக்கு. ஜெனிஸ்ரா கபரியல், உரும்பிராய் கிழக்கு. பாக்கியராஜா பாமா, உடுவில். செபஸ்தியாம்பிள்ளை லக்கி, மாதகல். கமலேஸ்வரி தம்பிராஜா, சுண்டிக்குளி. மகேந்திரன் பிரபோஷ், கலட்டி. முடியப்பன் றோசலீன் றெஜினா, வவுனியா. ஜீவியற் அனஸ்ரா நிக்கொலஸ், அச்சுவேலி. மேரி ஜெனிற்ரா விஸ்வாசம், நவக்கிரி. ஸ்ரானிஸ்லோஸ் டிலோசினி, இராஜேந்திரா றோட். தேவபாலன் சிந்துஜா, திருநெல்வேலி. ராஜபகதூர் டூரின்சுதர்சினி, உடுவில். கணரத்தினம் நிஷாந்தன், உரும்பிராய் கிழக்கு. ஜெபநேசன் ரெக்ஷொன், குருநகர். ஜோசப் அன்ரன் சாம்சன், பிரஸ் றோட். மெற்றலின்ராகினி கிறிஸ்துநாயகம், நெடுந்தீவு மத்தி. அருளானந்தம் அனிதா, ஆனைக்கோட்டை. சர்மிளா ஜமிஸ்டாஸ், குருநகர். பத்திநாதர் வசர்தடஸ், உடுப்பிட்டி. அமலசூரி அந்தோனிகுயீன், குருநகர். பிரான்ஸிஸ் ஜெயகாந்தன், குருநகர். வின்சனா சிலுவைராசா, அராலி தெற்கு. மரியாசோபனா செல்வரத்தினம், முள்ளியான். பிருந்தா நடராஜா, நெல்லியடி கிழக்கு. கிறிஸ்ரின் உடிற்றா, குருநகர். பற்குணம் விமலதாஸ், ஆனைக்கோட்டை. ஜூலியற் இமெல்டா மத்தியஸ், நெடுந்தீவு. ஜிவாஜி சாமிநாதன், நெடுந்தீவு மத்தி. செல்வநாயகம் மரின்வத்சலா, மல்லாகம். சூரியம் விஜயகுமார், கோவில் வீதி. ஜெயராஜசிங்கம் ஜெயராட், ஆனைக்கோட்டை. ஜசிந்தா மிச்சய், கதீற்றல் றோட்.

## சித்திரம்

சோதிலிங்கம் கோகிலன், இணுவில் கிழக்கு. அமலசூரி அந்தோனிகுயீன், குருநகர். முருகையா நிஷாந்தினி, சுன்னாகம் தெற்கு. வரதராசா தாயகன், சண்டிலிப்பாய் வடக்கு. சண்முகநாதன் கஜேந்திரன், காங்கேசன்துறை. மகேந்திரன் பிரேம்நாத், சங்கானை. மரியாம்பிள்ளை இமொன், சுண்ணாகம். ஜமேரா கணேஷ், உரும்பிராய் வடக்கு. யோகநாதன் கேதீசன்;, சுழிபுரம். அமிர்தலிங்கம் லிங்கேசன், சரவணை கிழக்கு, வேலணை. தில்லைநாதன் பகீரதன், உடுவில். திருப்பதி சிவந்தன், வல்வெட்டித்துறை. சண்முகராஜா ராஜ்ரூபன், அச்சுவேலி தெற்கு. கந்தையா ஜெயதர்சினி, சங்கானை.

## நாடகமும் அரங்கியலும்

இராசரத்தினம் திலீபன், சுன்னாகம் மேற்கு. சின்னராசா கோசலா, அல்வாய் வடக்கு. கதிரவேலு உஷாந்தினி, நெடுந்தீவு கிழக்கு. தம்பிராசா ஜெயதீபா, நீர்வேலி வடக்கு. துரைசிங்கம் அயூரன், சுன்னாகம். முருகதாஸ் ஐங்கரன், புத்தூர். கோவிந்தபிள்ளை ராஜவாணி, சுன்னாகம். ஸ்ரான்லி சுபேதார், பெர்னாண்டோ செப்பல்வீதி. தர்மலிங்கம் றஜீதரன் கரணவாய் தெற்கு. கந்தசாமி மோகனதீபன், நவாலி தெற்கு. குயிலினி வைத்தியநாதன், அளவெட்டி மத்தி. கவிதா செல்வேந்திரன், இணுவில். காசிநாதன் சிறிறங்கலிங்கம், மட்டுவில் தெற்கு. செல்வநாயகம் மெரின்வத்சலா, மல்லாகம். சிறிகாந்தன் பக்கீஸ்வரி, மல்லாகம். சத்தீஸ்வரி கந்தசாமி சுன்னாகம். பாலச்சந்திரன் பிறேம்குமார், பருத்தித்துறை. சபாரத்தினம் ரோகினி, மல்லாகம். மாணிக்கவாசகர் ஸ்ரீஉஷாந்தினி, தெல்லிப்பழை. பாலசுப்பிரமணியம் துசிகுமார், கட்டுவன். பாலசுப்பிரமணியம் நிரஞ்ஜினி, மட்டுவில் வடக்கு. நவனீதராஜா நந்தனி, பொலிகண்டி. ஈழத்சுமணன் ஜீவநந்தினி, நெடுந்தீவு. சிவராமி வெற்றிவேல், ஏழாலை தெற்கு. சற்குணலிங்கம் குகதாஸ், மயிலங்காடு. இந்திரராஜா கதிர்காமினி, பருத்தித்துறை. பாக்கியராஜா பாமா, உடுவில். கீதா கிருஷ்ணமூர்த்தி, அராலி மேற்கு. ஜூலியத் அனித்தாநிக்கொலஸ், அச்சுவேலி. தேவபாலன் சிந்துஜா, திருநெல்வேலி. நாகமுத்து சிவகேஸ்வரன், மந்துவில் கிழக்கு. கையிலாசபிள்ளை ரஜித்குமார், தாளையடி.

## ஆரம்பக்கல்வி

நடராஜா நிசாந்தினி, மட்டுவில் வடக்கு. தனலக்ஷ்மி பாலசுப்பிரமணியம், பொலிகண்டி மேற்கு. கோமளா ஐயாத்துரை, கைதடி தெற்கு. தெய்வேந்திரம் மீரா, கோண்டாவில் கிழக்கு. சின்னராஜா ரவிதாஸன், புத்தூர். செல்லத்துரை காஞ்சனா அனலைதீவு. அகில்ா சரவணமுத்து, திருநெல்வேலி. ரோஹிதா நகுலேஸ்வரன், நாவற்குழி தெற்கு. தனிஹா இராசரத்தினம், கட்டுவன் தெற்கு. நடராஜா ஜெயரூபன், துன்னாலை மத்தி. லிங்கரத்தினம் கஜலக்சுமி, கலட்டி அம்மன்றோட், தர்சினி காராளசிங்கம், வண்ணார் பண்ணை. தனப்பிரியா சிவபாதம், கந்தர்மடம். பிரான்சிஸ் ஜெயகாந்தன், குருநகர். இராஜகுரு சுசிகலா, பொலிகண்டி கிழக்கு. மேனகா இராஜதுரை, திருநெல்வேலி கிழக்கு. கந்தசாமி மாலினி, புன்னாலைக்கட்டுவன். சிவநந்தினி சிவராஜா, ஏழாலை தெற்கு. வாமதேவன் கிருபானந்தி, திருநெல்வேலி. சத்தியகலா சோமசுந்தரம், புளியங்குடல் வடக்கு. வின்கனா சிலுவைராசா, அராலி வடக்கு. சிவசக்தி சிவநேசன், ஏழாலை. அருந்தவராஜா சாமிலா, தாளையடி. பெர்ணாண்டோ அருஷ்டி, பாசையூர். தயாளினி செல்வராஜா, தட்டாதெரு சந்தி. மரியாசோபனா செல்வரத்தினம், முள்ளியான். வாசுகி தங்கராஜா, காரைநகர். இதயா தவேந்திரன், நீர்வேலி. கோபாலப்பிள்ளை சுதர்சினி, நெடுந்தீவு. சுகந்தஷா வடிவானந்தா, திருநெல்வேலி வடக்கு. சசிகலா சின்னராசா, மனாட்சி அம்மன்றோட். காந்தரூபன் பிரபாகரன், தாளையடி. தர்மலிங்கம் சிவாஜினி, தாளையடி. பாலப்பிரியா அந்தோனிப்பிள்ளை, தாளையடி. சுப்பிரமணியம் கமலாகரன், ஏழாலை. சிறிதேவி பாலசிங்கம், துன்னாலை வடக்கு. யோசப் அன்ரன் சாம்சன், பிரஸ்றோட். கல்பனா சபாநாயகம், உடுப்பிட்டி. நளாயினி மகாலிங்கம், மட்டுவில் தெற்கு. சிவலிங்கம் சுபாஷினி, தாளையடி. ஸ்ரீரதம் தீகன், புத்தூர் வடக்கு. நடராஜா ஆனந்தராஜா, தெல்லிப்பழை. கார்த்திகேசர் அபிராமி, கரணவாய் தெற்கு. வனிதா நாகன், அராலிமேற்கு. செல்வராஜா துஷ்யந்தினி, அல்வாய் வடக்கு. பிருந்தா நாகராஜா, நெல்லியடி கிழக்கு. பாஸ்கரதேவன் வினோதினி, சுன்னாகம். சிவரூபி குலசேகரம், தாளையடி. தவமலர் தர்மராஜா, அராலி மத்தி. கிறிஸ்ரின் யூடியா, குருநகர். கையிலநாதன் கல்பனா, பண்டத்தரிப்பு. ஜானகி தர்மலிங்கம், புலோலி மத்தி. அருட்செல்வம் அஜந்தன், துன்னாலை. பத்மவிநோதினி அனந்தகிருஷ்ணகுமார், மூளாய் தெற்கு. துஷியா குகதாஸன், நீர்வேலி. பற்குணம் விமலதாஸ், ஆனைக்கோட்டை. சிவரஞ்சனி சிவானந்தராஜா, பண்டத்தரிப்பு. ஆனந்தவடிவேல் சிவரஞ்சினி, கரவெட்டி மத்தி. கனகன சிவநேசன், மந்துவில் கிழக்கு. முருகேசு சுகந்தினி, கொடிகாமம். கவிதலா சிவலிங்கம், கோண்டாவில் கிழக்கு. சிதம்பரப்பிள்ளை நிதுஷா, கொடிகாமம். ஜூலியற் இமெல்டி மத்தியாஸ், நெடுந்தீவு. ஜெயகீதா தங்கவேலாயுதம், குடத்தனை மேற்கு. அலைமகள் சுப்பிரமணியம், இளவாலை. இராஜேந்திரன் பிரதீபா, துன்னாலை தெற்கு. பத்மலாவன்ஜம் கந்தசாமி, சுழிபுரம். நடராஜா ஜெயரூபன் துன்னாலை மத்தி. பத்மரூபி வரதராஜா, மூளாய். சின்னத்துரை சிவகுமார், கரணவாய் தெற்கு. இரத்தினலிங்கம் பிரதீபன், கோப்பாய் தெற்கு. சோமு ரோகணராஜா, சண்டிலிப்பாய். ஆறுமுகம் நிஷாந்த், எழுதுமட்டுவாள். தம்பியையா தர்மசீலன், இயற்றாளை, வரணி. வசந்தநாதன் ஜெயகநாதன், வசாவிளான். சுமங்கலி செல்வராஜா தெல்லிப்பழை. மரியரத்தினம் சாமினி, தும்பளை றோட், பருத்தித்துறை. இலடசுமணலிங்கம் மேரிலிங்க்யா, கொழும்புத்துறை. தவராஜா மகிழ்ராஜன், கரவெட்டி மேற்கு. சிவாஜினி பரமன், ஊர்காவற்றுறை. கார்த்திகா இராசதுரை, கோப்பாய் தெற்கு. இரத்தின சீரிண்டிலன் நிலானி, சாவகச்சேரி. உஷாராஜன் மதன், புத்தூர். தனபாலன் சுதர்சன், அராலி மத்தி, வட்டுக்கோட்டை. தியாக்ராஜா றஜீதா, மீசாலை வடக்கு. நிர்மலா ராஜகுரு, தொண்டமனாறு.

## கணிதம் (ஆங்கில மொழி மூலம்)

ரவீந்திரகுமாரன் சகிலா, கோப்பாய் தெற்கு. தர்சினி வைரமுத்து கொல்லங்கலட்டி. சிவராஜா ராஜமலர், காரைநகர். ருசானவேர்ஜிலா அருட்பிரகாசம், மெயின் வீதி. வரதராஜசர்மா திருக்குமார், கரணவாய் கிழக்கு. சிவபுத்திரன் மீரா, வதிரி. கந்தையா அனிதா கரவெட்டிகிழக்கு. ராஜயோகன், இசைவாணி ஆனைக்கோட்டை. நிருஷா திரிபுரபவன், நல்லூர். துரைராஜசிங்கம் சனந்தனன், இடைக்காடு, அச்சுவேலி. வேலும் மயிலும் மீரா, வட்டுதெற்கு. சுதர்சினி சின்னத்துரை, நீர்வேலி மேற்கு. ஆறுமுகம் சங்கீதா, தும்பளை. பருத்தித்துறை. சோதிலிங்கம் சதீஸகுமார், கொல்லங்கலட்டி. சிவபுண்ணியம் மயூரன், தும்பளை, பருத்தித்துறை. சிவநாதன் கோதை, நுணாவில் கிழக்கு. சண்முகநாதன் கிருபா, புலோலி தெற்கு. இராசயோகன் கலைவாணி, ஆனைக்கோட்டை. சிவபாலசிங்கம் பிரபாகரன், இணுவில். மாணிக்கவாசகர் ஜெயராம், தும்பளை. நிமலினி கோபாலசந்திரன், திருநெல்வேலி கிழக்கு. வினுஷா அருணகிரிநாதன், கொக்குவில் மேற்கு. கணேசபிள்ளை பகீரன், அரியாலை. சிவபாதசுந்தரம் கங்கா, இடைக்காடு. கிருஷா பாரதிதாசன், கந்தர்மடம். உமாராணி சிதம்பரநாதன், கொக்குவில் மேற்கு. நித்தியானந்தன் வி..., கல்வயல்றோட், சாவகச்சேரி. மத்தியஸ் சகாஜதாஸ், பாசையூர். ஜோன்சன் பசில்அலிஸ், கோவில்வீதி. பாக்கியநாதன் சகீலன், கல்வயல். பூபாலசிங்கம் கோபிகிருஷ்ணா, மீசாலை சந்திரசேகரம் சாருமதி, இடைக்காடு. காயத்திரி ஜெயராஜசிங்கம், மிருசுவில். தவரத்தினசிங்கம் தர்சினி, புலோலி தெற்கு. பிரியதர்சினி பரமேஸ்வரன், திருநெல்வேலி. சிவசுந்தரம் ராஜாராம், துன்னாலை மேற்கு. ராஜயோகன் ராஜசேகரன், ஆனைக்கோட்டை.

## இந்து சமயம்

இராசேந்திரம் பிரதீபா, துன்னாலை மேற்கு. பத்மலாவண்யம் கந்தசாமி, சுழிபுரம். பத்மரூபி வரதராஜா, மூளாய். சின்னத்துரை சிவகுமார், கரணவாய் தெற்கு. இரத்தினசிங்கம் பிரதீபன், கோப்பாய் தெற்கு. சோமு ரோஹான்ராஜா, சண்டிலிப்பாய். ஆறுமுகம் நிஷ்காந்த், எழுதுமட்டுவாள். தம்பியையா தர்மசீலன், இயற்றாளை, வரணி. வசந்தநாதன் ஜெகநாதன, வசாவிளான். சுமங்கலி செல்வராஜா, தெல்லிப்பழை. தனலக்ஷ்மி பாலசுப்பிரமணியம், பொலிகண்டி மேற்கு. கோமளா ஐயாத்துரை, கைதடி தெற்கு. சின்னராஜா ரவிதாசன், புத்தூர். ரோஹிதா நகுலேஸ்வரன், நாவற்குழி தெற்கு. லிங்கரத்தினம் கஜலக்ஷ்மி, கலட்டி அம்மன்வீதி. தர்சினி காராளசிங்கம், வண்ணார்பண்ணை. மேனகா ராஜதுரை, திருநெல்வேலி கிழக்கு. சிவநந்தினி சிவராஜா, ஏழாலை. வாமதேவன் கிருபானந்தி, திருநெல்வேலி கிழக்கு. சிவ சக்தி சிவனேசன், குப்பிளான் தெற்கு. தயாளினி செல்வராஜா, தட்டாதெரு சந்தி. வாசுகி தங்கராஜா, காரைநகர். இதயா தெய்வேந்திரன், சிறுபபிட்டி வடக்கு. கோபாலபிள்ளை சுதர்சினி, நெடுந்தீவு. தர்மலிங்கம் சிவாஜினி, தாளையடி. சுப்பிரமணியம் கமலாகரன், குப்பிளான் வடக்கு. நடராஜா நிஷாந்தினி, மட்டுவில் வடக்கு. அகிலா சரவணமுத்து, திருநெல்வேலி கிழக்கு. தணிகா இராசரத்தினம், கட்டுவன் தெற்கு. கந்தசாமி மாலினி, கட்டுவன் தெற்கு. அருந்தவராஜா சர்மிளா, தாளையடி. காந்தரூபன் பிரபாகரன், தாளையடி.

## விஞ்ஞானம் (ஆங்கிலம்)

யசோதா யோகேஸ்வரன், கயிலாசபிள்ளையார் கோவில்வீதி. பேரம்பலம் குகவதனா, இளவாலை. உஷாந்தினி சர்வநாதன, சுதுமலை வடக்கு. தாட்சாயனி ஜெயகுமாரன். பருத்தித்துறை. நாகேந்திரராஜா நயந்தா, மீசாலை வடக்கு. கௌசல்யா, சிறிகாந்தன், கொக்குவில். கனகமனோகரி வைரவநாதன், நீர்வேலி. அனுஷியா அமிர்தலிங்கம், நல்லூர். சாந்தி மகாலிங்கம், சிறுப்பிட்டி மேற்கு. தனுஷா, கிருஸ்ணதாஸன, கொக்குவில் மேற்கு. அமிர்தலிங்கம் கஜேந்திரன், நீர்வேலி வடக்கு. ஜனார்த்தனி பாலச்சந்திரன், கொக்குவில் கிழக்கு. ஜெயதர்சினி கனகசபாபதி, கைதடி தெற்கு. தனபாலசிங்கம் சிவாஜினி, குருமன்காடு. அபிராமி அருணகிரிநாதன், மானிப்பாய். இராமச்சந்திரன் கோகிலன், சுன்னாகம். ஹேமலோஜினி தேவராஜன், உடுவில். லீலாவினோதன் ஜமுனா, மறவன் புலோ. இராசேந்திரம் சசிகுமார், கொக்குவில் மேற்கு. அருளப்பு ஜினாட் நிரோஷன், நவாலி வடக்கு. தர்சனா புலேந்திரன், ஆனைக்கோட்டை. தர்மகுலசிங்கம் கவிதா, சாவகச்சேரி. சிவசுப்பிரமணியம் மலைமகள், கட்டுவன் மேற்கு. சிதம்பரநாதன், நிரஜா, ஏழாலை வடக்கு. செல்வராஜா செல்வதி, சூராவத்தை. சுஜாதா இராசையா, நர்வேலி வடக்கு. சுசீலா கதிர்காமத்தையன், மீசாலை.

## நூலக விஞ்ஞானம்

துர்க்காதர்ஜினி கதிர்காமத்தம்பி, கொல்லன்கலட்டி. இராசைய்யா தயாளினி, கரவெட்டி மத்தி. கணேசமூர்த்தி கோபிகிருஷ்ணா, பருத்தித்துறை. மயூரகிரிநாதன் பாமினி, புலோலி தெற்கு. கந்தசாமி கஜேந்திரன், சுன்னாகம். திருநீலகண்டன் தயாளினி, அராலி தெற்கு. தர்மகுலசிங்கம் கலைப்பிரியா, புலோலி தெற்கு. பாலசுப்பிரமணியம் ஜெபதர்சிகா, சுண்டுக்குளி. யோகேஸ்வரன் யோகமதி, நாவலர்றோட்.

(......ஆம் பக்கம் பார்க்க....)

# ஆளுநரின் வருகையை த.தே.கூட்டமைப்பு எதிர்த்தது ஏன்? விளக்கமளிக்கிறார் மாவை

**ஜனாதிபதியின் நடவடிக்கைகள் யாவும் இன முரண்பாட்டை வளர்ப்பவையாக மீண்டும் போரை ஏற்படுத்தும் வகையிலேயே அமைந்திருக்கின்றன. குறிப்பாக சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி வழங்குவது என்ற போர்வையில் பல நாடுகளினதும் முப்படைகளையும் ஜனாதிபதி நாட்டிற்கு வரவழைத்து தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்த முனைகின்றார்.**



**இவ்வாறு பல்வேறு வகையில் தமிழ் மக்களுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்து அவர்களை அழிக்க முற்படும் ஜனாதிபதியின் பிரதிநிதி கலந்து கொள்ளும் எந்தவொரு நிகழ்ச்சியிலும் நாம் கலந்து கொள்ளப் போவதில்லை என்கிறார் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.**

### மக்களுக்கு உதவியது யார்?

'சுனாமி' கடற் பேரழிவு நிகழந்த தினத்தில் இருந்து இன்று வரைக்கும் தமிழ்ப் பிரதேசங்களில பாதிககப்பட்ட மக்களை முகாமகளிலும், தனியார் இடங்களிலும பாதுகாத்து உணவு, உடை, மருத்துவ உதவிகள் மற்றும் மீட்புப் பணிகள் உட்பட்ட பராமரிப்புப் பணிகளைப் பொதுமக்கள், அரசுசாரா நிறுவனங்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோரே நிறைவேற்றி வந்தனர்.

இபபணிகளை மேற்கொள்ளும் பொருட்டு அமைக்கப்பட்ட முகாம்களையொட்டி செயலணிக் குழுககளும் அமைத்து இயங்கி வருகின்றன.

இச் செயலணியில் மாவட்ட பிரதேச செயலகப் பொறுப்பாளரும் வெளிநாட்டு, உள்நாட்டு அரசுசாரா பிரதிநிதிகளும் செயலாற்றி வருகின்றனர்.

இலங்கை அரசின் நடவடிக்கைகளும் உதவிப் பணிகளும் 4 அல்லது 5 தினங்களுக்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட்டதாயினும் இற்றைவரை முழுமையான உருப்படியான செயற்பாடுகள் அமையவில்லை.

இதேவேளை, கடற் பேரழிவினபின் ஆரம்பத்தில் அரச ஆயுதபபடை உறுப்பினர்கள் சிலரும் சில இடங்களில் மனிதாபிமான உதவிகளில் ஈடுபட்டிருந்தனர் என்பதும் மறுக்கப்படவில்லை.

### இலங்கையில் சுனாமியின் தாக்கம்

நாம் கவனத்திற் கொள்ள வேண்டியதென்னவெனில் இன முரணபாடுகளும், ஆயுதப் போரும நிலவிய இலங்கைத் தீவில தான் 'சுனாமி' கடற் பேரழிவும் ஏற்பட்டிருக்கிறது என்பதாகும்.

20 ஆண்டுகால யுத்தத்தினாலும் இனக் கலவரங்களினாலும் 70 ஆயிரம் மக்கள் அழிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் தேசத்தில் பொருளாதார அடித்தளங்கள் அழிக்கப்பட்டு விடடன. இலட்சக் கணக்கான மக்கள் அகதிகளாக வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் சொந்த வாழ்விடங்களை விட்டு அகதி முகாம்களில் சீரழிகின்றனர்.

தமிழ்த் தேசத்தின் பெரும் பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலும்; நிர்வாகக் கட்டமைப்பிலும் இருக்கின்ற பொழுது சில பகுதிகள் அரசின இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசமாக இருக்கின்றது.

### தீர்வுகாணும் சந்தர்ப்பத்தை ஜனாதிபதி முறியடித்துவிட்டார்

இந் நிலையில் மூன்றாண்டுகளாக யுத்தநிறுத்தம் நடைமுறையிலிருக்கின்றது. இக் காலத்தில் வெளிநாடுகள் குறிப்பாக வடக்குக கிழக்கின் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கு என வழங்கவுள்ள நிதியைப் பயன்படுத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை நிறுவவேண்டிய சந்தர்ப்பத்தையும், அதன் மூலம் இனப்பிரச்சினைககுத் தீர்வுகாணும் சந்தர்ப்பத்தையும் ஜனாதிபதி முறியடித்துவிட்டார்.

மீண்டும் யுத்தம் வெடிக்கப் போகின்றது எனும் சூழலில் சர்வதேச நாடுகள் சமாதான முயற்சிகளை முன்னெடுத்த வேளையில தான் 'சுனாமி' கடற் பேரழிவு ஏற்பட்டிருக்கிறது.

இச் சந்தர்ப்பத்தில் மனிதாபிமான நடவடிக்கைகள் முதன்மை பெற வேண்டியது அவசியமாகும்.

### இனமுரண்பாட்டை மேலும் வளர்த்து விட்டார் ஜனாதிபதி

இரணடாவது இச் சந்தர்ப்பததைப் பயன்படுத்தி இன நல்லுறவை ஏற்படுத்தவும், அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் எனும் அரசியல இலக்கையும் அடிப்படையாகக கொண்டு நிவாரண நடவடிக்கைகளும், கட்டுமானப் பணிகளும் வடிவமைக்கப்பட வேண்டும். சர்வதேச சமூகம் இக்கருத்தையே கொண்டிருக்கிறது.

ஆனால், ஜனாதிபதியும், அரசாங்கமும் இன முரண்பாட்டை விரிவுபடுத்துவதிலும், அதிகாரத்தைக் குவிப்பதிலும அதற்கு மேலாக இராணுவமயப்படுத்தும் நடவடிக்கைகளிலும தொடர்ச்சியாகத் திட்டமிட்டுச் செயலாற்றுவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம். தீவிரமாக எதிர்க்கின்றோம்.

### இடைக்கால நிர்வாகம் ஏன் தேவைப்படுகிறது

ஏற்கனவே வடக்குக் கிழக்கில் ஒரு இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை இருந்திருந்தால் சுனாமிப் பேரழிவின் பின் நிவாரணப் பணிகளையும், மீள் கட்டுமானப் பணிகளையும் முன்னெடுப்பது இலகுபட்டிருக்க முடியும். அதனையும் முறியடித்து விட்டு, நிவாரணத்திற்காக அரசு மற்றும் புலம் பெயர்ந்த தமிழ் மக்கள், அரசு சாரா நிறுவனங்கள் அனுப்புவுள்ள உதவிகளையும் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளிலும் ஜனாதிபதி ஈடுபடுகின்றார்.

### புலிகளின்தலைமைக்கு எதிராக பொய்ப் பிரசாரம்

'சுனாமி' பேரழிவையும் அதனால் ஏற்பட்டுள்ள மனிதாபிமானத்தையும் மீறி தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமைக்கு எதிராக அரச ஊடகங்களே உண்மைக்குப் புறம்பான அப்பட்டமான 'கொயபல்ஸ்' பாணியிலான பிரசாரத்தைச் செய்துவருகின்றது அரசு.

### தமிழ் மக்களுக்கு அச்சுறுத்தல்

இந்து மா சமுத்திரப் பிராந்தியத்தில் பல கொள்கை முரண்பாடுகளையும் பிராந்திய ஏகாதிபத்திய நலன்களையும் கொண்டுள்ள படையணிகளை சுனாமிப் பேரழிவைப் பயன்படுத்தி இலங்கையில் நிலைகொள்ள வைத்திருப்பதானது குறிப்பாக தமிழ்த் தேச மக்களை அச்சுறுத்தி நிற்கின்றது.

இன முரண்பாடுகளும், பேரினவாத சிந்தனையும் கொண்ட சிங்கள இராணுவத்தை தமிழ்த் தேச மக்களின் நிர்வாகத்திலும் பராமரிப்பிலுமுள்ள முகாம்களை பொறுப்பேற்று நடத்த ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இந் நடவடிக்கையானது, வடக்கு-கிழக்கில் இராணுவ நிர்வாகக் கட்டமைப்பை ஏற்படுத்துவதன் மூலம் ஜனாதிபதி அதிகாரத்தை நிலைநாட்டும் செயலாகும்.

இந் நடவடிக்கைகளுக்குப் பின்னரும் தமிழ்த் தேசத்தில் சுனாமிப் பேரழிவால் பாதிக்கப்பட்ட மக்களின் எதிர்கால நலன்களை மையமாகக்கொண்டு சர்வதேச நிவாரண உதவிகளைப் பயன்படுததும் கட்டமைப்புக்களையே தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், நாமும் ஏற்படுத்தி வந்திருக்கிறோம.

### கோபி அனானின் வருகையைத் தடுத்தார் ஜனாதிபதி

இச் சந்தர்ப்பத்தில் ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் இலங்கைககு மனிதாபிமானச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு கடந்த 8 ஆம் திகதி வருகை தந்தார்.

கடற் பேரழிவால் அழிந்து போன வடக்கு-கிழக்குத் தமிழ் தேசத்தையும் பார்வையிடுவார் எனும் நம்பிக்கை தமிழ்த்தேசத்தில் ஏற்பட்டிருந்தது.

அதறகான முன்முயற்சிகளும் எடுக்கப்பட்டிருந்தன.

நிகழ்ச்சி நிரலில் தமிழ்ப் [illegible] தேசங்களுக்குச் செல்ல செயலாளர் நாயகம் கோபி அனான் அவர்களே விருப்பம் கொண்டிருந்தார்.

இன முரண்பாடுகள் குறைந்து மனிதாபிமான உணர்வுகளுடன் இலங்கையில் சமாதான முயற்சிகளும, இனப் பிரச்சினைக்குத் தீர்வும் ஏற்பட சந்தர்ப்பம் வந்திருக்கின்றதென்றே அனைவரும் நம்பியிருந்தனர்.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவும் அவர் அரசும் தீவிர இராஜதந்திர நடவடிக்கைகளைப் பயன்படுத்தி ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான், சுனாமி பேரழிவினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட குறிபபாக அம்பாறை, முல்லைத் தீவு, வடமராட்சி கிழக்குப் பிரதேசங்களுக்கு பயணம் செய்வதைத் தடுத்து நிறுத்திவிட்டனர். பகிரங்கமாக அனைவரும தெரிந்து கொண்ட ஒரு மனிதாபிமான மற்ற, நாகரிகமற்ற செயலை ஜனாதிபதியும் அவர் அரசும் நிறைவேற்றிவிட்டன.

சமாதான வழிகளில் பேச்சுவார்த்தை மூலம் மனிதாபிமானப் பணிகளினூடாக இனப்பிரசசினைககுத் தீர்வுகாண முடியும் என்ற பொது நம்பிக்கையை ஜனாதிபதி தகர்த்துவிட்டார்.

இந்தப் பின்னணியில்தான் ஜனாதிபதியின் பிரதிநிதி வடக்கு-கிழக்குக்கான ஆளுநர் யாழ்ப்பாணம் வருகிறார். இச் சூழலில தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளுநரின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் விடுவது என்று தீர்மானித்தோம்.

தமிழ்தேச மக்களின் மனக் குமுறலையும், உணர்வுகளையும் இதன் மூலம் ஜனாதிபதியும், சர்வதேசமும் அறிந்து கொள்ளவேண்டும் என வேண்டுகோள் விடுக்கின்றோம். (க)

## பங்களாதேஷ் கிரிக்கெற் அணி டெஸ்ட் போட்டிகளில் முதல் வெற்றி

2000 ஆம் ஆண்டில் டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற பங்களாதேஷ கிரிக்கெற் அணி 35 போட்டிகளில் விளையாடி அதில் 31 போட்டிகளில் தோல்வியடைந்த நிலையில் இப்பொழுது தனது முதலாவது டெஸ்ட் வெற்றியைப் பெற்றிருக்கிறது.

சிட்டகொங்கில் நடைபெற்ற சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் அது 226 ஓட்டங்களால் வெற்றி பெற்றதன் மூலம் டெஸ்ட் அந்தஸ்தை ரத்துச் செய்ய வேண்டுமென பல்வேறு தரப்புக்களும் தெரிவித்திருந்த எதிர்ப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது பங்களாதேஷ் அணி.

கடந்த வியாழனன்று ஆரம்பமான இப்போட்டியில் நாணயச் சூழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ அணி முதலில் துடுப்பெடுததாடி தனது முதல் இன்னிங்ஸில 488 ஓட்டங்களை எடுத்தது.

ஹபிபுல் பஷார்-94, ரஜின் சலே-89, முகமட் ரபீக் -69, நவீஸ இக்பால்-56, மாஸ்ரவ் மாற்றஷா-48, காலித் துஷாட்- 49 ஓட்டங்களை எடுத்தனர். சிம்பாவே அணி சார்பில் பந்து வீச்சில் போபு 4 விக்கெற்றுக் களையும் நிகலா, கிறேமா ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து சிம்பாவே அணி தனது முதல் இன்னிங்ஸில் 312 ஓட்டங்களை எடுத்தது. தைபு - 92, சிகும்பரா-71, ரெய்லர் -39 ஓட்டங்களை எடுத்தனர். பந்து வீச்சில் ரபீக்-5, மாற்றஷா-3, பாஷ்யா-1 விக்கெற்றுக்களை வீழ்த்தினர்.

பங்களாதேஷ் அணி இரண்டாவது இன்னிங்ஸில் 204 ஓட்டங்களை எடுத்து ஹபிபுல் பஷார் ஆகக் கூடுதலாக 55 ஓட்டங்களை எடுத்தார். சிகும்பரா 5 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

சிம்பாப்வே தனது இரண்டாவது இன்னிங்ஸில் 154 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. மஸகட்ஷா 56 ஓட்டங்களையும் ரெய்லர் 44 ஓட்டங்களையும் எடுத்தனர்.

எனாமுல் ஹக் 6 விக்கெற்றுக்களையும் மாற்றஷா, பாஷ்யா ஆகியோர் தலா 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர். (து-7)

## விளையாட்டு செய்திகள்

### சுனாமி நிவாரண நிதிப் போட்டி

சுனாமி நிவாரண நிதிக்காக மெல்போர்னில் நடைபெற்ற ஐ.சி.சி லெவன், ஆசிய லெவன அணிகளுக் கிடையிலான ஒரு நாள் போட்டியில் ஐ.சி.சி லெவன் அணி 112 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இப் போட்டி மூலம் 1 கோடி 46 இலட்சத்து 46 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்கள் திரட்டப்பட்டன.

அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹோவார்ட் தொடக்கி வைத்த இப்போட்டியில் திரட்டப்பட்ட நிதி உலகத் தொண்டு அமைப்பான வேர்ல்ட் விஷன் அமைப்பின் தலைவர் டிம்காஸ்டில்லோவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இப்போட்டியில் அடிக்கப்பட்ட ஒவ்வொரு ஓட்டத்திற்கும் 'சேனல் 3' தொலைக்காட்சி நிறுவனம் 33 ஆயிரம் ரூபாவை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(து-7)

முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி
ஒல்லாது வானம் பெயல் - குறள்

வலம்புரி

## செப்படி வித்தையாகிவிட்ட வீதி திருத்தம்

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணம் இன்னமும் புதுப்பொலிவு பெறவில்லை. எங்குபார்த்தாலும் உடைவுகளும், சிதைவுகளுமே எச்சமாகியுள்ளன. போதாக்குறைக்கு தனியார் காணிகளில் பற்றிப் படர்ந்திருக்கும் செடிகொடிகள் நுளம்புகளின் தங்குமிடமாகவுள்ளது.

கூடவே கைவிடப்பட்ட கோலத்தில் காட்சி த்ரும் குளங்கள் நுளம்புகளின் பிரசவ விடுதிகளாக அமைந்துள்ளன. யுத்தநிறுத்த உடன்பாடு ஏற்பட்டு மூன்று வருடங்கள் பூர்த்தியாவதற்கு இன்னமும் ஒரு மாதமே காத்திருக்கும் வேளையில் கூட புனரமைப்புப் பணிகள் எதுவும் நடைபெற்றதாக இல்லை.

அரசின் நிதி ஒதுக்கீட்டின்மை - பாராமுகம் என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டாலும் அதனை முழுமையாக ஏற்றுக்கொள்வதில் தவறுண்டு.

குறிப்பாக யாழ்ப்பாணத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிகள் பயன்படுத்தப்பட்ட போதிலும் நடந்துமுடிந்த வேலைகள் திருப்தியற்றவையாக - உறுதித்தன்மை இல்லாதவையாக காணப்படுவது கண்கூடு.

இத்தகைய கண்காணிப்பற்ற - பொறுப்பற்ற புனரமைப்புப் பணிகள் இடம்பெற்றதற்கான அடிப்படைக் காரணங்களில் முதன்மையானது அரச அதிகாரிகளின் அசமந்தப் போக்கும் கடமையில் காட்டும் ஒழுங்கீனமுமேயாகும்.

ஒவ்வொரு அரச அதிகாரியும் தனது அதிகாரத்திற்குட்பட்ட பணிகளை செம்மையாக மேற்பார்வை செய்திருந்தால் - ஒழுங்காக திட்டமிட்டிருந்தால், பணிகளின் முடிவு பாராட்டில் முடிந்திருக்கும்.

ஆனால் அத்தகைய பாராட்டுக்களுக்கு இடமில்லாதவாறு புனரமைப்புப் பணிகள் சில நடந்து முடிந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணத்தின் வீதித் திருத்தத்தை எடுத்துக் கொண்டால் "வீதிகள் திருத்தம்" என்பது பேருக்கு நடந்ததாக இருக்கின்றதே தவிர, அவை செம்மையாக செப்பனிடப்படவில்லை. அதனால் திருத்தப்பட்ட வீதிகள் ஒரு சில மாதங்களில் மீண்டும் பழைய நிலைக்கு திரும்பியுள்ளது. இதனால் ஏற்படுகின்ற விபத்துக்கள் - உயிர்ச்சேதங்கள் பற்றி யாருமே கவனம் எடுப்பதாகவே இல்லை.

இந் நிலைமை ஏன் ஏற்படுகின்றது. இது விடயத்தில் நடந்த தவறுகள் எவை என்ற ஆய்வுகள் முக்கியமானவை ஆகும்.

சுனாமி கடல் கொந்தளிப்பினால் வடமராட்சியில் ஏற்பட்ட அவலங்களின் போது காயப்பட்டவர்களை யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு வருவதில் அம்புலன்ஸ் சாரதிகளும், ஏனைய வாகன சாரதிகளும் பட்ட கஷ்ரங்கள் சொல்லி மாளாது - யாழ். பருத்தித்துறை வீதியில் காணப்படும் குன்றும் குழியும் திருத்தப்படாமை ஏன்? இப்பழுதை எந்த அதிகாரிகளும் கவனிக்கவில்லையா? இதுபோன்ற கேள்விகள் மக்களிடையே எழுந்துள்ளது. இதேபோல் யாழ்ப்பாணத்தில் திருத்தப்பட்ட வீதிகள் உட்பட அனைத்து வீதிகளும் ஏதோ ஒரு வகையில் பழுதடைந்து போயுள்ளமை அவதானிக்கத்தக்கதொன்றாகும்.

யாழ்ப்பாணத்தையும் தீவகத்தையும் இணைக்கின்ற பண்ணை வீதி, சுனாமியின் தாக்கத்திற்கு உட்பட்ட வீதியைப் போன்று காட்சி தருகின்றது.

அதிகாரிகளிடம் முறையீடு செய்தும் அது பற்றி கவனம் எடுக்காமையால் யாழ். தீவக பேர்க்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் வாகன உரிமையாளர்கள் நேற்று முன்தினம் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். வீதியைத் திருத்தக் கோரி மக்கள் ஆர்ப்பாட்டத்திலும் மறியல் போராட்டத்திலும் ஈடுபடும் காலம் அண்மித்து வருகின்றது. அதன் ஓர் அடையாளமாகவே தீவகத்தில் மறியல் போராட்டம் நடைபெற்றுள்ளது.

வீதிகள் சரியான முறையில் பேணப்படாவிட்டால், பராமரிக்கப்படாவிட்டால் அதனால் விபத்துக்கள் ஏற்படுவது மட்டுமன்றி வாகனங்களும் விரைவில் பழுதடையும் என்பதும் அதனால் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுவோர் நட்டமடைந்து சேவையில் இருந்து விலகவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் ஏற்படும்.

ஆக, வீதிகள் திருத்தப்பட்டபோதிலும் அவை மீண்டும் சேதமடைந்துள்ளன எனில் அதுபற்றி உரிய அதிகாரிகள் கவனிப்பது மிக மிக அவசியமாகும்.

# வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநரின் யாழ். விஜயம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பயனுள்ளதாக வேண்டும்

## தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் எதிர்பார்ப்பு

**வடக்குக்-கிழக்கில் வாழ்ந்துவரும் மக்கள் நீண்டகால யுத்தத்தால் உயிா, உடமை என்ற அனைத்தினாலும் பாதிக்கப்பட்டு வாழ்வியல் அவலங்களை சந்தித்து வந்தவர்கள் என்பதை தாங்கள் அறிவீர்கள். இந்த நிலையில் இயற்கை ஏற்படுத்தியுள்ள அழிவுகளும் வடக்குக்-கிழக்கு மக்களையே மிகவும் மோசமாகப் பாதிக்கச் செய்துள்ளது. உயிா, உடமை அனைத்தையும் இழந்த நிலையில் மக்கள்படும் அவலம் ஈடுசெய்ய முடியாத பேரவலமாகவே உள்ளது. இத்தகைய இயற்கை அனர்த்தத்தினால் மிக மோசமான அள்வில் பாதிக்கப்பட்ட வடக்குக்-கிழக்கு மக்களிற்கான உடனடித் தேவைகளையோ, மனிதாபிமானப் பணிகளையோ இலங்கை அரசு செய்ய முன்வரவில்லை.**

இவ்வாறு சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் உண்மை நிலைகுறித்து தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகத்தால் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெனாண்டோவிடம் கையளிக்கப்பட்ட மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பதிக்கப்பட்ட மக்களிற்கான இழப்பீட்டுப் பகிர்விலும் தமிழ் மக்கள் பாரபட்சப்படுத்தப்படுகின்றனர். அத்துடன் காலங்காலமாக போர்க் கலங்களைத் தாங்கி வடக்குக்-கிழக்கு மக்களின் சொத்துக்களையும் உயிர்களையும் அழிவிற்குட்படுத்திய இராணுவத்தினரிடம் பாதிக்கப்பட்ட மக்களிற்கான நலன்புரி நிலையங்களைக் கையளித்து அவர்களூடாக இழப்பீட்டு உதவிகளை வழங்குகின்ற செயற்பாடு மிகவும் வேதனைக்குரியதாகும்.

மேலும், அழிவுற்ற இடங்களையும் பாதிக்கப்பட்ட மக்களையும் பார்வையிட்டு அவர்களிற்கு ஆறுதல் கூற வந்திருந்த ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனானை வடக்குக்-கிழக்கில் பாதிக்கப்பட்ட இடங்களையும் மக்களையும் பார்வையிடாது தடைப்படுத்தியமை அரசின் இன நிராகரிப்பு முனைப்பையும், பாரபடசமான போக்கையும், மனிதாபிமானமற்ற செயற்பாட்டையுமே வெளிக்கொணர்கிறது.

இச் செயற்பாடானது தமிழ் மக்கள் மீது இலங்கை அரசு காலங்காலமாகக் காட்டிவருகின்ற பா்ரபட்சத்தையே வெளிப்படுத்துகிறது. இந்த நிலைகுறித்து வடக்கு-கிழக்கு மக்களிடம ஏற்பட்டுள்ள அதிருப்தியையும், வேதனையையும் தங்களிற்கு அறியத்தருவதோடு ஐ.நா.செயலாளர் நாயகம கோபி அனானை தடை செய்தவர்கள் மீதான கண்டனத்தையும் வெளிப்படுத்துகின்றோம்.

எனவே, வடகிழக்கு ஆளுநராகிய தங்களது வருகை பாதிக்கப்பட்ட வடகிழக்கு மக்களிற்கு பயனளிப்பதாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். (ப)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உளநல பணிசெய்ய நடவடிக்கை

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

(கொழும்பு)

"சுனாமி" பேரலைத்தாக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொழில்சார் உளவியல் ரீதியான ஆலோசனைகள் தேவைப்படுவதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

தேசிய அனர்த்த முகாமைத்துவ நிலையத்தில் சுயவிருப்பில் செயலாற்றுகின்ற மனோதத்துவ நிபுணர்களுடன் நீண்டநேரம் ஜனாதிபதி இது தொடர்பாக கலந்துரையாடியதாக ஜனாதிபதி செயலகம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 26ஆம் திகதி இடம்பெற்ற இயற்கை அனர்த்தத்தில் இருந்து க்காப்பாற்றப்பட்ட, ஆனால் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக விசேட செயற்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தத்துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களை மாத்திரம் உளவியல் ஆலோசனைகளில் ஈடுபடுத்த வேண்டும்.

கல்வித்துறை மற்றும் சமயப் பெரியவர்களின் ஒத்துழைப்பினை இந்த நடவடிக்கைகளுக்குப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அரச, அரச சார்பற்ற மற்றும் சர்வதேச அமைப்புக்களின் நிபுணர்களுடன் இணைந்து தேசிய சேவை ஒன்றினை ஆற்றமுடியும். இந்த நடவடிக்கைகள் நாட்டின் சமூக கலாசாரப் பின்னணியைக் கவனத்தில் கொண்டே நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதியால் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுளளது.

அத்துடன் அரச சுகாதாரத் திணைக்களத்துடன் இணைந்து செயற்படும் மனோதத்துவத்துறை சார் நிபுணர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நிறுவவும் தீர்மானிக்கப்பட்டது. (ப-4)

# வீண் வதந்திகளை பரப்புவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

## பொலிஸ் மா அதிபர் எச்சரிக்கை

மீண்டும கடற்பேரலை ஏற்படப்போவதாகவும், புயல் காற்று வீசப்போவதாகவும், வதந்திகளைப் பரப்புபவர்களுக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ்மா அதிபர் சந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இத்தகைய வதந்திகளையிட்டு எவரும் ஏமாற வேண்டாமென பொதுமக்களிடம் பொலிஸ் மா அதிபா கேட்டுக்கொண்டுள்ளார்.

இவ்வாறான வதந்திகளை பரப்பி வருவோர் தொடர்பாக கவனம் செலுத்திவருமாறு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவிக்கப்பட்டதுடன் வதந்திகளைப் பரப்புவோரை கைதுசெய்து விளக்கமறியலில் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

சுனாமி பேரலையினால் திருகோணமலை மாவட்டத்தில் சேதமடைந்த பொலிஸ் நிலையங்கள் சிலவற்றை பொலிஸ் மா அதிபர் நேற்று முன்தினம் சென்று பார்வையிட்டார்.

அத்துடன் இயற்கை அன்ர்த்தத்தினால் பாரிய சேதமடைந்துள்ள குச்சவெளி பொலிஸ் நிலையத்தை வேறு இடத்தில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

மேலும் இயற்கை அனர்த்தத்தினால் காணாமல் போன வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் தொடர்பான தகவல்களை திரட்டும் பணிகளில் பொலிஸார் ஈடுபடவேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் இடிபாடுகளை அகற்றுவதற்கு முன்னர் காணாமல் போனவர்கள் சம்பந்தப்பட்டவர்களின் ஆவணங்கள் இருக்கின்றனவா? என்று தேடிபபார்ப்பது அவசியம் என்றும பொலிஸ்மா அதிபர் சந்திர பெர்னாண்டோ தெரிவித்தார். (க-9)

## ஓம் திினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**ஓ கிறிஸ்தவர்களே! சகோதர மக்களுக்காக உழைப்பது மருத்துவ மனைகள் கட்டுவது இவறறைத் தவிர வேறு எதையும் நீங்கள் உங் கள் பைபிளில் காணவில்லையா?... கடைக்காரன் தனது கண்ணோட்டத்தில் யேசுவைப் பார்க்கிறான். யேசு எவ்வளவு நன்றாகக் கடை வைத திருப்பார் என்கிறான் ஆனால் யேசு மதுககடையையோ வைத்திருக்க மாட்டார். பத்திரிகை ஆசிரியராகவும் இருந்திருக்க மாட்டார்.**

சுவாமி விவேகானந்தர்

# முகாம் பாடசாலைகள் எதிர்வரும் 25ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கியுள்ள பாடசாலைகள் முதலாம் தவணைக்காக எதிர்வரும் 25ம் திகதி ஆரம்பமாகவுள்ளது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நலன்புரி நிலையங்களாக இயங்கும் பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் வேறு இடங்களில் தங்கவைக்கப் படவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கைகளை தேசிய நடவடிக்கைகள் நிலையம் மேற்கொண்டுள்ளது என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தற்போது நாடு முழுவதிலும் 264 பாடசாலைகளில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் இடமாற்றப்பட்ட பின்னர் பாடசாலைகள் எதிர்வரும் 25ம் திகதி ஆரம்பமாகும். அதே வேளை சுனாமியால் பாடப்புத்தகங்களை இழந்த மாணவர்களுக்கு அவற்றைப் பெற்றுக்கொடுக்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-8)

ராஜா யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய், சினேகா, வடிவேல் நடித்த
வசீகரா
கா.நேரம் 10.30, 2.30,6.30, 9.30 (பு.நே)




நிறைஞ்சனாஸ் (சங்கானை)
பிரசாந், சிம்ரன் நடித்த
ஜோடி
கா.நேரம் 11.00,2.45,6.00(பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு8.45(பு.நே)
ANACONDA-2

# மத்திய கல்லூரி மாணவருக்கு

பரீட்சை வினாத்தாள் மதிப்பிடும் பணிகள் இடம்பெறுகின்றபோதும் பாடசாலை நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை அறிவித்துள்ளார்.

10 ஆம், 11 ஆம் வகுப்பு மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்களை பாடசாலைக்குச் சமுகமளிக்குமாறும் 10, 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு எதிர்வரும 17 ஆம் திகதி பாடசாலை ஆரம்பமாகும் என்றும் அவர் அறிவித்துள்ளார். (த)

## இந்தியத்...

சென்றார். அங்கிருந்து பலத்த இராணுவப் பாதுகாப்புடன் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்திற்குச் சென்றார். அங்கிருந்தவர்களுடன் கலந்துரையாடிய பின் மீண்டும் பருத்தித்துறை இராணுவ முகாமுக்குச் சென்று ஹெலிகொப்டர் மூலம் வடமராட்சியின் கரையோரப் பகுதிகளை சுற்றிப் பார்வையிட்டார்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான .வடமராட்சி கிழக்குப் பகுதியையும் நிருபமராவ் ஹெலியில் சென்று பார்வையிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

தனது யாழ்ப்பாண விஜயம் குறித்து எவ்வித தகவலும் தெரிவிக்காது அவர் இரகசியமாக வந்து சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியத் தூதுவர் நிருபமராவின் யாழ். விஜயம் குறித்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்துடன் தொடர்பு கொண்டு கேட்டபோது அவரின் யாழ்ப்பாண விஜயம் குறித்து தகவல் தெரிவிக்கப்பட்ட போதிலும் அவர் சென்று பார்வையிட்ட இடங்கள் மற்றும் அதிகாரிகளை சந்தித்துக் கலந்துரையாடிய விடயங்கள் குறித்த தகவல் எதனையும் வெளியிட அவர்கள் மறுத்துவிட்டனர். (ச)

## சுன்னாகத்தை...

இதேவேளை தனது கணவன் கொழும்பில் இருந்து மட்டக்களப்புக்குச் சென்று கொண்டிருந்தவேளை தன்னுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார் என்றும் சில மணிநேரங்களின் பின்னர் தான் கணவனுக்கு தொடர்பு எடுத்தபோது கணவனது கைத்தொலைபேசியில் சிங்களத்தில் சிலர் கதைத்ததாகவும் அவரை யாரோ கடத்திச் சென்றுள்ளதாக தான் கருதுவதாக அவரது மனைவி தெரிவித்துள்ளார். (ச-19)

## சுனாமி...

ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கின்றோம்.

இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சி நாட்டின் கடல் தொழில் துறையை ஆறு மாதங்களுக்குள் கட்டியெழுப்பவும் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் யோசனைகளை ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருக்கின்றது.

இதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களை அனைத்து வழிகளிலும் மீட்டெடுக்க ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானம் மேற்கொண்டுள்ளது. அதற்கமைய ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்து செயற்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-04)

# சுனாமி தாக்கிய இடங்களில் அதிகாலையில் அவலக்குரல்

## மக்கள் மத்தியில் பீதி

(கொழும்பு)

சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட தென்பகுதியைச் சேர்ந்த கடற்கரை மற்றும் பற்றைக் காடுகளில் 'என்னைக்காப்பாற்றுங்கள்' 'எமக்கு உதவிசெய்யுங்கள்' என்று அபயக்குரல்கள் கேட்பதாக அப்பிரதேசமக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக அதிகாலை ஒருமணி முதல் மூன்று மணி வரை இவ் அபயக் குரல்கள் கேட்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

ஆனால் அழுகுரல்கள் கேட்கும் பகுதிகளுக்குச் சென்றுபார்த்தால் அங்கு ஒருவரையும் காணவில்லையென்றும் சடலங்கள் எதுவும் இல்லை யென்றும் மக்கள் கூறினர். இந்தக் குரல்கள் சுனாமி பேரலையினால் உயிரிழந்தவர்களின் ஆவிகளின் குரலாக இருக்கலாம் என்று மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

இந்த அபயக் குரல்களினால் அப்பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் குறிப்பாக குழந்தைகள் பீதியுடன் காணப்படுகின்றனர். (ச-8)

# சத்துணவு வழங்கும் நடவடிக்கையில் மகளிர் அரசியல்துறையினர் ஈடுபாடு

(துன்னாலை)

சுனாமியில் பாதிக்கப்பட்டு நலன் புரி முகாம்களில் தங்கியுள்ள கர்ப்பிணித்தாய்மார்கள், குழந்தைகள் மற்றும் பாலூட்டும் தாய்மாருக்கான சத்துணவு வழங்கும் நடவடிக்கையில் யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

இதற் முதற்கட்ட நடவடிக்கை பொலிகண்டி மேற்கு கொற்றாவத்தை அமெரிக்க மிசன் பாடசாலை நலன்புரி முகாமில் தங்கியுள்ள சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், மற்றும் பாலுட்டும் தாய்மாருக்கு யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் கயல்விழி சத்துணவு வழங்கி ஆரம்பித்துவைத்தார்

தொடர்ந்து வடமராட்சியிலுள்ள அனைத்து நலன்புரி நிலையங்களிலும் மேற்கொள்ளப் படுமெனகயல்விழி தெரிவித்தார். (ச101)

# அரசின் அண்மைக்கால செயற்பாடுகள்...

எவ்வித முயற்சிகளும் இல்லாத காரணத் தினால், தமிழ்மக்கள் ஏமாற்றம் அடைந் துள்ளார்கள் என தமிழ்ச்செல்வன் தெரி வித்துள்ளார்.

அந்த ஏமாற்றம் அடைந்த சூழலில் ஐ.நா. செயலாளர் நாயகம் வருகின்ற போது அவர் இந்தப் பகுதிக்கு வந்து பாதிக்கப்பட்ட மக்களை பார்வையிடுவார், உதவிபுரிவார் என்று நம்பியிருந்த தமிழ் மக்களுக்கு ஐ.நா. செயலாளரின் வருகையினை தடுத்த நடவடிக்கை ஏமாற்றம் அளித்துள்ளது.

ஒட்டுமொத்தமாக நம்பிக்கையற்றிருந்த சமாதான முயற்சிகள் மீண்டும் துளிர்க்கும் என்ற நம்பிக்கைகள் எல்லாவற்றையும் சிதறடிக்கும் வகையில் அரசாங்கத்தின் அண்மைய செயற்பாடுகள் அமைந்துள்ளன.

கடற்புலிகள் பெருமளவு உயிரிழந்துவிட்டார்கள் என்ற வதந்தியை அரசு முதலில் பரப்பியது. அதன் உண்மைநிலை தெரிந்த பின்னர் தலைவரைப் பற்றிய வதந்தியை பரப்பினார்கள். இது தெற்கில் உள்ள ஊடகங்களின் வழமையான காரியமாக இருப்பதால் நாங்கள் பெரிதுபடுத்தவில்லை என்றார்.

விடுதலைப்புலிகள் வலிந்து யுத்தத்தை திணிக்கமாட்டார்கள். இராணுவம் தமிழ் மக்கள் மீது வலிந்து போரைத் திணிக்க முயன்றால் மக்களைக் காக்க போரை எதிர்கொள்ள வேண்டிய கடப்பாடு புலிகளுக்குண்டு. அந்த வகையில் யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கும் என்று ஒரு தரப்பின் நிலைப்பாட்டை வைத்துக் கொண்டு கூறமுடியாது.

ஆகவே இலங்கை அரசும் படைகளும் நடந்து கொள்கின்ற நடவடிக்கைகளை வைத்துக்கொண்டு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று தீர்மானிக்கலாம் என்றார். (ச-04)

## யாழ். நகரில்...

தமது உறவினர்களிடம் பஸ்நிலையத்தில் வைத்து முறையிட்டுள்ளனர். இதனையடுத்து சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர்களில் ஒருவர் மடக்கிப்பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார்.

நையப்புடைக்கப்பட்ட இளைஞர் அங்கிருந்து தப்பிச் சென்று தனது சகாக்களுடன் மீண்டும் வந்து அங்கிருந்த ஆட்டோக்களை அடித்து நொருக்கலில் ஈடுபட்டனர். இதனையடுத்து கோஷ்டி மோதல் இடம்பெற்றது. சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர். இச்சம்பவத்தில் சிவன்பண்ணை வீதியைச்சேர்ந்த சேது நாதன் சுதர்சன் (வயது 35) என்பவரே காயமடைந்தவராவர். (ச-8,4)




இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.01.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.